
வெற்றித்திருமகன் எம்.ஜி.ஆர். நூல் வரிசை–20

எங்க வீட்டுப் பிள்ளை MGR

முனைவர் செ.இராஜேஸ்வரி M.A., M.Phil., Ph.D.,







சந்திரோதயம் பதிப்பகம், மதுரை.

வெற்றித்திருமகன் எம்.ஜி.ஆர். நூல்வரிசை – 20

எங்க வீட்டுப் பிள்ளை
எம்.ஜி.ஆர்.

முனைவர் செ. இராஜேஸ்வரி M. A., M. Phil., Ph. D.,

சந்திரோதயம் பதிப்பகம்,மதுரை.
Mob.:7010997639.

நூல் விவரம்

நூல் வரிசை	:	வெற்றித்திருமகன் எம்.ஜி.ஆர். நூல்வரிசை – 20
நூலின் பெயர்	:	எங்க வீட்டுப் பிள்ளை எம்.ஜி.ஆர்.
ஆசிரியர்	:	முனைவர் செ. இராஜேஸ்வரி
துறை	:	சினிமா, சமூகம்
வடிவமைப்பு	:	செ. மீனாட்சி
பதிப்பாளர்	:	சந்திரோதயம் பதிப்பகம் 3/422, தினமணி நகர், மதுரை–625 018 தொலைபேசி எண் : 7010997639
பதிப்பு	:	2020
மொழி	:	தமிழ்
பக்கங்கள்	:	115
விலை	:	Rs.200/-

- - - - -

Book	:	*Vetrithirumagan MGR – 20*
Title	:	*Enga Veettu Pillai MGR*
Author	:	*Dr.C.Rajeswari, M.A., M.Phil., Ph.D.,*
Subject	:	*Cinema, Society*
Cover Design	:	*C. Meenatchi*
Publisher	:	*Chandrothayam Pathippagam 3/422, Dinamani Nagar Madurai – 625 018 Phone: 7010997639*
Month of Publish	:	*2020*
Pages	:	*115*
Price	:	*Rs.200/-*



எம்.ஜி.ஆரின் உண்மை தொண்டர்

முன்னாள் சென்னை பெருநகர மேயர், ஆரோக்கியத்தின்

வழிகாட்டி **மனித நேயச் செம்மல் சைதையார்**

அவர்களுக்கு நன்றி! நன்றி!! நன்றி!!!



அன்புக் காணிக்கை



கவிஞர் கண்ணதாசனின் அண்ணன்
திரைப்படத் தயாரிப்பாளர்
ஏ.எல்.எஸ். ப்ரோடக்‌ஷன்சின் உரிமையாளர்
ஏ.எல். சீனிவாசனின் மகன்
ஏ.எல்.எஸ். கண்ணப்பன் அவர்களின் மனைவி
திருமதி ஜெயந்தி கண்ணப்பனுக்கு
இந்நூல் அன்பு காணிக்கை.

நாகிரெட்டி சக்ரபாணி அளிக்கும்
விஜயா கம்பைன்ஸ் புரொடக்ஷன்ஸ்

எங்க வீட்டுப் பிள்ளை

ஈஸ்ட்மென் கலர்
டைரக்ஷன் · சாணக்யா
ஒளிப்பதிவு · வின்சென்ட் · சுந்தரம்
இசை · விஸ்வநாதன் · ராமமூர்த்தி

புதிய சாதனையைக் காட்டும் புள்ளி விவரங்கள்

100 நாட்களின் வசூல் விவரம்....

		மொத்த வசூல் (ரூ. பை.)	சர்க்காருக்கு வரி (ரூ. பை.)	வரி நீக்கி நிகர வசூல் (ரூ. பை.)
1. சென்னை.	காசினோ பிராட்வே மேகலா	9,28,519 . 40	3,80,259 . 17	5,48,260 . 23
2. மதுரை.	சென்ட்ரல்	2,78,752 . 65	74,702 . 60	2,04,050 . 05
3. கோவை.	ராயல்	2,64,547 . 83	90,402 . 76	1,74,445 . 07
4. சேலம்.	சாந்தி	2,11,444 . 24	67,496 . 45	1,48,947 . 79
5. திருச்சி.	ஜுபிடர்	1,98,635 . 74	75,067 . 49	1,23,568 . 25
6. பல்லாவரம்.	ஜனதா	1,24,515 . 52	31,412 . 08	93,103 . 44
7. திருநெல்வேலி.	லட்சுமி	1,27,865 . 43	50,907 . 52	76,957 . 91
8. வேலூர்.	தாஜ்	1,20,629 . 60	39,517 . 87	81,111 . 73
9. தஞ்சை.	யாகப்பா	1,06,695 . 94	31,894 . 44	74,801 . 50
10. பாண்டிச்சேரி	அஜந்தா	89,109 . 80	17,926 . 44	71,182 . 86
11. திண்டுக்கல்.	என். வி. ஜி. பி.	96,697 . 45	34,450 . 72	62,246 . 73
12. ஈரோடு.	ராஜாராம்	96,203 . 57	38,076 . 86	58,126 . 71
13. குடந்தை.	நியூ சினிமா	88,256 . 58	28,341 . 57	59,915 . 01
14. [illegible]	டைமண்ட் ([illegible])	87,504 . 73	32,392 . 81	55,111 . 92
15. [illegible]	[illegible]	71,637 . 17	28,688 . 86	42,948 . 31
		2886,315 · 15	1021,537 · 64	1864777 · 51

17 வது

சென்னை
கேசினோ · பிராட்வே
மேகலா

மதுரை · சென்ட்ரல் · கோவை · ராயல்

நூலாசிரியர் பற்றி



முனைவர். செ. இராஜேஸ்வரி மொழி பெயர்ப்பியல் துறையில் முனைவர் பட்டம் பெற்றவர். **புலமை, செந்தமிழ், வளர் தமிழ், ஓங்கு தமிழ் நா.வா.வின் ஆராய்ச்சி** *போன்ற ஆய்விதழ்களில் ஆய்வுக் கட்டுரைகள் வெளியிட்டார். மொழிபெயர்ப்பியல் ஆய்வு என்ற ஆய்வு கட்டுரைகள் அடங்கிய நூல் ஒன்றை 1992இல் வெளியிட்டார். இந்நூல் இணையத் தமிழ் பல்கலைகழகத்தின் மின் நூல் தொகுப்பில் இடம்பெற்றுள்ளது.*

1988 முதல் தமிழ் ஆங்கில மொழிபெயர்ப்புப் பணிகளில் ஈடுபட்டுள்ளார். **Indian Women– Changes and Challenges, Urban Theology, Vaigai Paripatal, Assisted reproductive technologies and its Impact on Women, Eco Vision and Mission, Bachelor's Study Materials for Social Science [IGNOU], Neuro Ophthalmology Articles** *போன்ற பல துறை சார்ந்த பனுவல்களைத் தமிழில் மொழி பெயர்த்துள்ளார். 1993இல் ஆசியவியல் ஆய்வியல் நிறுவனத்தில் இணைப் பதிப்பாசிரியராகப் [Associate editor] பணியாற்றினார். அப்போது ஜப்பானிய மொழியைத் தமிழில் கற்பது எளிது என்பதை அறிந்து அதற்கான நூல் உருவாக்கும் பணியில் ஜப்பானியப் பெண் யூகோ ஃபுகுரோயியுடன் இணைந்து செயல்பட்டார். அந்த நூல் மூன்று பாகங்களாக வெளி வந்துள்ளது. ஆசியவியல் ஆய்வியல் நிறுவனத்தில் வெளிநாட்டு மாணவர்களுக்குத் தமிழ் கற்பித்தார். தமிழ்*

மாணவர்களுக்கு ஜப்பானிய மொழி இலக்கணம் கற்பித்தார். யுக்கோ சான் அம்மாணவர்களுக்கு ஒலிப்பயிற்சி அளித்தார்.

1986 முதல் சமயச் சொல் அகராதி, எபிரேயம் - தமிழ் அகராதி; கிரேக்கம் - தமிழ் அகராதி உருவாக்கத்திற்காக மக்கள் கல்வி அறக்கட்டளையின் இயக்குனர் மறை திரு.இராபின்சன் லேவி ஐயா அவர்களுடன் இணைந்து இருபது ஆண்டுகள் தீவிரமாகப் பணியாற்றினார். ஈரோடு மகளிர் கலை, அறிவியல் கல்லூரி, திருச்சி ஸ்ரீமத் ஆண்டவன் கலை, அறிவியல் கல்லூரி, மதுரை அமெரிக்கன் கல்லூரி போன்றவற்றில் சில ஆண்டுகள் தமிழ் விரிவுரையாளராகப் பணியாற்றினார்.

*2000*இல் மதுரையில் அமெரிக்காவின் விஸ்கான்சின் பல்கலைக்கழக மாணவர்களுக்குத் தமிழ் கற்பித்தார். அப்போது வெளிநாட்டவருக்கு தமிழ் கற்பிக்கப் பாட நூல் ஒன்றை உருவாக்கினார். அரவிந்த் கண் மருத்துவமனையில் மொழி பெயர்ப்பாளராகவும் வேற்று மாநிலம் மற்றும் வெளிநாட்டு மருத்துவர்களுக்கு, தமிழ் ஆசிரியராகவும் பணியாற்றினார். அப்போது தமிழ் தெரியாத கண் மருத்துவர்களுக்குத் தமிழ் கற்பிக்க *Tamil for Non-Tamils* என்ற பாட நூலை உருவாக்கினார். இன்றும் அந்தப் பாட நூல் அங்குப் பயன்பாட்டில் உள்ளது. அது போல அங்குச் செவிலியர் பயிற்சி பெறும் இளம் பெண்களுக்கு ஆங்கிலம் கற்பிக்க *Easy English* என்ற ஆங்கிலப் பாட நூலை உருவாக்கினார். மக்கள் கண்காணிப்பகத்தில் வெளி மாநிலத்தவருக்கு ஆங்கிலமும் வெளி நாட்டவருக்குத் தமிழும் கற்பித்தார்.

தமிழ் கற்கும் வெளிநாட்டு மாணவர்களுக்காக சென்ட்டர் ஃபார் லேங்குவேஜ் ஸ்டடீஸ் [Centre for Language Studies] என்ற பெயரில் தனி மையம் ஒன்றை அமைத்து அவர்களுக்குத் தமிழ் கற்பித்தார். திராவிட இயக்கப் பாரம்பரியத்தில் வந்ததனால் இவர் திமுக, அதிமுக வரலாறு குறித்து அறிந்திருந்தார். குறிப்பாக எம்.ஜி.ஆர். பற்றிய தகவல்களைத் தொகுத்து வைத்திருந்தார். தமிழ்க் கலையும் பண்பாடும் பற்றிக் கற்பிக்கும்போது தமிழ்நாட்டில் மேடைத்தமிழ், மேடை நாடகம், திரைப்படம் ஆகியன அரசியலில் உருவாக்கிய விதம் பற்றியும் விளக்கினார். அப்போது எம்.ஜி.ஆர். அரசியல் தலைவரான விதம் குறித்து மேலும் அறிந்துகொள்வதில் அமெரிக்க மாணவர்கள் மிகுந்த ஆர்வம் காட்டினர். அவர்களை எம்.ஜி.ஆர். படங்களைப் பார்க்க திரையரங்குக்கு அழைத்துச் சென்றார். திரை அரங்கில் இரசிகர்கள் காட்டிய ஆர்வமும் ஆர்ப்பரிப்பும் கண்டு கேட்டு வியந்து எம்.ஜி.ஆர். குறித்து சில மாணவர்களும் பேராசிரியை முனைவர் சாரா திக்கி என்பவரும் ஆராய்ச்சி செய்தனர். அவர்களின் ஆர்வம் கண்டு எம்.ஜி.ஆர். தகவல் மையம் ஒன்றைத் தொடங்கி அவர் குறித்த நூல்களையும் அவரது படங்களையும் சேகரித்து வைத்தார். பின்னர் அமெரிக்க மாணவர்கள் இந்தியாவுக்கு வருவது குறைந்ததால் இத்திட்டத்தைத் தொடர்ந்து செயல்பட முடியவில்லை.

எம்.ஜி.ஆர். பற்றி ***"ஒப்பனையும் ஒரிஜினலும் எம்.ஜி.ஆர். 100"*** *என்ற தலைப்பில் விகடன்.காமில் (காம் இணைய தளத்தில்) முப்பது கட்டுரைகள் வெளியிட்டார். அதன் தொடர்ச்சியாக கனடாவில் இருந்து வரும் www.tamilauthors.com என்ற இணைய*

இதழில் தொடர்ந்து கட்டுரைகள் எழுதினார்.. எம்.ஜி.ஆரின் இரசிகர் மன்றங்களின் தனித்தன்மை குறித்து ஆங்கிலத்தில் ஒரு நூல் எழுதிவருகிறார். எம்.ஜி.ஆர். பற்றி நூறு நூல்கள் எழுத வேண்டும் என்பது இவர் இலட்சியம். அதில் தற்போது

1. ***வெற்றித்திருமகன் என்ற பெயரில் தொடங்கும் வரிசை நூல்கள் ஆகும்,***
2. ***எம்.ஜி.ஆர். நிழல் நிஜம் நிரந்தரம்,***
3. ***சிக்கு மங்கு சிக்கு மங்கு சச்ச பப்பா (எம்.ஜி.ஆர். கற்பிக்கும் குழந்தை வளர்ப்பு முறைகள்),***
4. ***வீரமகன் போராட வெற்றி மகள் பூச்சூட,***
5. ***மகளிர் போற்றும் மக்கள் தலைவர் எம்.ஜி.ஆர்.,***
6. ***எம்.ஜி.ஆர். ஒரு ஜீவ நதி,***
7. ***எம்.ஜி.ஆர். ஒரு கலியுகப்போராளி,***
8. ***ஒளி விளக்கு எம்.ஜி.ஆர்.,***
9. ***வெற்றிப் படிக்கட்டில் நாடோடி மன்னன் – I,***
10. ***நீங்க நல்லா இருக்கணும் [எம்.ஜி.ஆரின் திரைப்படப் பாடல்கள் -I],***
11. ***பாட்டுடைத் தலைவன் எம்.ஜி.ஆர். [எம்.ஜி.ஆரின் திரைப்படப் பாடல்கள் - II],***
12. ***இரசிகர்களின் இதய தெய்வம் எம்.ஜி.ஆர்.,***
13. ***முத்தமிழ்க் காவியம் மதுரை வீரன்***
14. ***இரட்டை வேடத்தில் ஜொலிக்கும் எம்.ஜி.ஆர்.***
15. ***எம்.ஜி.ஆர். படங்களில் அறிவியல் புனைவு [MGR Science Fiction Films]***

16. **பட கோட்டி, மீனவ நண்பன் ஓர் ஒப்பீடு**

17. ***Unique Fandom of MGR** (எம்.ஜி.ஆர். பற்றிய ஆங்கில நூல்)*

18. எம்.ஜி.ஆர். படங்களில் தொழில் தர்மம் (Professional Ethics in MGR Movies)

19. ***எம்.ஜி.ஆர். படத்தில் சண்டைக் காட்சிகளின் சுவாரஸ்யங்கள் - I***

20. ***எங்க வீட்டுப் பிள்ளை எம்.ஜி.ஆர்.*** ஆகியவை வெளிவந்துள்ளன.

தஞ்சையைச் சேர்ந்த தமிழ் இலக்கியச் செம்மல் கவிஞர் முத்தமிழ் விரும்பி அவர்களின் ***பூ மர நிழல், வறட்சியின் பாடல்கள், உன்னொடு உரையாடுதல் காதலின் மொழி, திட்டிவாசல் பெண்ணொருத்தி, மற்றும் தேனடையும் வரலாறு*** என்ற கவிதை நூல்களை இவர் முறையே ***"Shade of the Flowering Tree, Songs of Dryness, Speaking with You, Language of Love, The Flower Moon (A Lady at the little gate) and Honey Hive, Ambrosial Kiss (Editor)",*** என்று ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துள்ளார். இந் நூல்களைச் சென்னை எமரால்டு பதிப்பகம் வெளியிட்டுள்ளது.

தமிழிலக்கியச் செம்மல் கவிஞர் பொறிஞர் முத்தமிழ் விரும்பி அவர்களின் பூ மர நிழல் மற்றும் திட்டி வாசல் பெண்ணொருத்தியின் தொகுப்புகளில் உள்ளடக்கப் பகுப்பாய்வு மேற்கொண்டு அவற்றைப் ***பூ மர நிழலில் களமும் காலமும் மற்றும் கவிஞர் பொறிஞர் முத்தமிழ் விரும்பியின் பாடுபொருளும் பாசப்பொருளும் [திட்டிவாசல் பெண்ணொருத்தி மட்டும்], என்ற நூல்களையும் '2020 தை மாதத்தில்***

இன்று' கவிதையில் அடிக்கருத்தியல் ஆய்வு, முத்தமிழ் விரும்பியின் கவிதையில் காதல், முத்தமிழ் விரும்பியின் கவித்திறம் என்ற நூலையும் வெளியிட்டார்.

பண்பாட்டு ஆய்வு நூல் வரிசை என்ற தலைப்பில் **பண்பாட்டு நகர்வுகள் [தமிழ் நாட்டில் இருந்து ஜப்பானுக்கு], தேவேந்திரன், தமிழகத்தில் பெண் தெய்வ வழிபாடு, மருத நிலப் பெண் தெய்வங்கள்** ஆகிய நூல்களை எழுதி வெளியிட்டார். காணாமல் போன கடவுளர் என்ற தலைப்பில் ஒரு நூல் எழுதி வருகிறார்.

சென்னை பெருநகராட்சியின் முன்னாள் மேயர் மனித நேயச் செம்மல் சைதை சா. துரைசாமி அவர்களின் சிறப்புத் திட்டங்களும் செயல்பாடுகளும் என்ற பெயரில் ஒரு நூல் எழுதி வெளியிட்டுள்ளார். இவர் எழுதிய சிறுகதைகள் **'அமராவதியின் காதல்'** என்ற பெயரில் தொகுக்கப்பட்டு அமேசானிலும், அச்சிலும் வெளிவந்தது. நெருஞ்சி இலக்கிய இதழில் இவரது கட்டுரைகள் வருகின்றன. தினகரன் ஜோதிட மலரில் இவர் எழுதிய "என்னோட ராசி நல்ல ராசி" என்ற தொடர் வந்து கொண்டிருக்கின்றது. மாதமிரு முறை வரும் ஆன்மீகம் இதழில் இவரது கட்டுரைகள் தொடர்ந்து வெளிவருகின்றன.

தஞ்சையில் உள்ள நெருஞ்சி இலக்கிய இயக்கம் இவருக்கு **'சிறந்த மொழி பெயர்ப்பாளர் விருது'** வழங்கியது. மதுரை லேடி டோக் கல்லூர் இவருக்கு மொழிபெயர்ப்பு மற்றும் ஆராய்ச்சிக்கான **'பெண் சாதனையார் விருது'** வழங்கியது.

உள்ளடக்கம்



என்.டி.ராமாராவ், திலீப் குமார், எம்.ஜி.ஆர்.

1. எம்.ஜி.ஆருக்காக தமிழில் செய்த மாற்றங்கள்

தெலுங்கில் ராமுடுபீமுடு - தமிழில் எங்க வீட்டுப் பிள்ளை

தெலுங்கில் சுரேஷ் புரொடக்ஷன்ஸ் நிறுவனத்தார் என்ற பெயரில் 1964இல் டி ராமாநாயுடு என்பவர் ராமுடு பீமுடு படத்தைத் தயாரித்தார். இவர் பதின்மூன்று மொழிகளில் 150க்கும் மேற்பட்ட படங்களைத் தயாரித்தவர். கின்னஸ் ரெக்கார்டில் இவருடைய சாதனை தனிநபர் சாதனையாக இடம்பெற்றது. இவருடைய மகன் நடிகர் வெங்கடேஷ் தெலுங்கில் பிரபல நடிகராக விளங்குகிறார். இவரது பேரன் ராணா இளைஞர்களின் நட்சத்திரமாகத் திகழ்கிறார். இவருடைய மகள் லட்சுமி, நாகேஸ்வர ராவின் மகன் நாகார்ஜுனாவின் மூத்த மனைவி ஆவார். நாகார்ஜுனா இவரை விவாகரத்துச் செய்துவிட்டு அமலாவைத் திருமணம் செய்து கொண்டார். நாகார்ஜுனாவுக்கும் லக்ஷ்மிக்கும் பிறந்த நாகசைதன்யா டி.ராமா நாயுடுவின் இன்னொரு

பேரன் ஆவார். ஆக டி. ராமா நாயுடுவின் மகன் பேரன் ஆகியோரும் தெலுங்குத் திரை உலகில் பிரபலங்களாக விளங்குகின்றனர்.

ராமுடு பீமுடு என்ற படம் என் டி ஆர் நடித்து 1964இல் மே மாதம் 21ம் தேதி வெளிவந்தது இதே படம் தமிழில் எம்.ஜி.ஆர். நடித்து விஜயா வாகினி தயாரிப்பில் 1965 ஆம் ஆண்டு ரசிகர்களுக்குப் பொங்கல் பரிசாக தமிழகமெங்கும் திரையிடப்பட்டது. 1957இல் எம்.ஜி.ஆர். நாடோடி மன்னன் எடுத்தபோது அவருக்கு **[back projection]** பேக் பிராஜக்சன் முறையில் ஒரு பாடல் காட்சி எடுக்க வேண்டியிருந்தது அப்போது விஜயா வாகினி ஸ்டூடியோவில் எடுத்தார். இது தவிர அங்கிருந்த ஆறு தளங்களையும் வாடகைக்கு எடுத்து ஒரே நேரத்தில் அனைத்திலும் படப்பிடிப்பை நடத்தி அப்படத்தை முடித்தார். இவற்றிற்கு நன்றிக் கடனாக



விஜயா வாகினி ஸ்டூடியோ அதிபர் நாகிரெட்டியின் விஜயா வாகினி புரோடக்சன்ஸ் எம்.ஜி.ஆரிடம் ஒரு படம் நடித்து வேண்டும் என்று வேண்டியபோது உடனே ஒப்புக்கொண்டார்.

கதையும் இயக்குனரும்

ஆங்கிலத்தில் வந்த நாடகக் கதை ஒன்றை தெலுங்கில் நரச ராஜு என்பவர் திரைக்கதையாக மாற்றினார் தெலுங்கிலும் தமிழிலும் இப்படத்தை பி சாணக்கியா இயக்கினார். இப்படத்தின் வெற்றிக்குப் பிறகு அடுத்த ஆண்டில் 1966இல் சத்யா மூவிசின் 'நான் ஆணையிட்டால்' படத்தையும் அதற்கு அடுத்த ஆண்டில் 1967இல் ஜெமினி பிலிம்சின் ஒளிவிளக்குப் படத்தையும் 1968இல் புதிய பூமி படத்தையும் பி. சாணக்யா இயக்கினார். இந்நான்கு படங்களுமே எம்.ஜி.ஆருக்கு வெற்றிப் படங்களாக அமைந்தன. ஒரே கதை ஒரே இயக்குனர் என்றாலும் தெலுங்கில் எடுத்ததைப் போல தமிழில் இப்படத்தை எடுக்கவில்லை. இப்படம் தமிழில் எம்.ஜி.ஆர். படமாக அமைந்தது. அதற்காக பல மாற்றங்கள் செய்யப்பட்டன. அவற்றை இவ்வியலில் காண்போம்.

எம்.ஜி.ஆரின் கதாபாத்திரப் பெயர்கள்

எங்க வீட்டுப் பிள்ளை படம் எம்.ஜி.ஆருக்கு அவருடைய திரைப்பட வரலாற்றில் புதிய திருப்பமாக அமைந்தது. இப்படம் தெலுங்கில் என்.டி.ராமாராவ் நடித்து வெளியானது. இப்படத்தின் பெயர் ராமுடு பீமுடு. என்.டி.ஆர். அமைதியான கதாபாத்திரத்தில் ராமுடுவாகவும் துறுதுறுப்பான



கதாபாத்திரத்தில் பீமுடுவாகவும் நடித்திருந்தார். தமிழில் எம்.ஜி.ஆர். ராமு, இளங்கோ என்ற பெயரில் நடித்தார். ராமு என்பது அவரது ராமச்சந்திரன் என்ற பெயரிலேயே இருந்ததால் அதை ரசிகர்கள் ஏற்றுக்கொள்வர் ஆனால் இலட்சுமணன் அல்லது பீமன் என்பவை புராணப் பெயர்கள். அவை திமுகவின் கொள்கைக்கு முரணானது என்ற காரணத்தால் அவர் அந்தப் பெயர்களை விலக்கிவிட்டு இளையவன் என்ற பொருளில் இளங்கோ என்ற பெயரை ஏற்றுக்கொண்டார். இளங்கோ தமிழில் முதல் காப்பியம் எழுதிய இளங்கோவடிகளின் பெயரும் ஆயிற்று. எம்.ஜி.ஆர். ஜானகி அம்மாளின் மகன் வயிற்றுப் பேரன்களுக்கு செங்குட்டுவன், இளங்கோ என்று பெயர் சூட்டினார். அவருடையை தமிழ்ப் பற்று அளப்பரியது.

திலீப்குமார் நடித்து ராம், அவுர் ஷியாம் என்ற பெயரில் ராமுடு பீமுடு இந்தியில் வெளிவந்தது. இதே படம் கன்னடத்தில் வெளியான் போது அதில்

கன்னட சூப்பர் ஸ்டார் ராஜ்குமார் நடித்தார். இவ்வாறு பல மொழிகளிலும் வெளிவந்த இப்படம் மற்ற மொழிகளை விடத் தமிழில் மிகப் பெரிய வெற்றியைப் பெற்று வெள்ளி விழா கொண்டாடியது. இதற்கு முக்கிய காரணம் எம்.ஜி.ஆர். நடிப்பில் காட்டிய வேற்றுமையும், அழகும் கதையமைப்பில் காட்டிய ஆர்வமும் படத்தை சுவாரஸ்யமாக கொண்டு போவதற்கான பல விஷயங்களை இடம்பெறச் செய்ததுமாகும். திமுகவின் பிரச்சாரப் படைப்பாக இப்படம் அமைந்தது. ஆளுங்கட்சியான காங்கிரசுக்குக் கொடுத்த சவுக்கடியாக 'நான் ஆணையிட்டால்' பாடல் காட்சி அமைந்தது. ரசிகர்களின் ஏகோபித்த ஆரவாரம் காங்கிரஸ் ஆட்சிக்கு மூடுவிழா நடத்தியது.

ராமு எம்.ஜி.ஆர். அறிமுகம்

ராமுடு பீமுடு ஆந்திராவில் ஆளும் கட்சியாக இருந்த காங்கிரஸ் கட்சிக்கு ஆதரவாக இருந்தது. தொடக்கக் காட்சியில் காங்கிரஸ் கட்சியின் சாதனைகளை விவரிப்பதாக முதல் பாடல் காட்சியை அமைந்தது. முதல் பாடலில் ஒரு விவசாயி அவன் மனைவியுடன் இருக்கும் சிலை காட்டப்பட்டது. கிராமத்து ஜோடி ஆடிப்பாடியது. அரசின் பல சாதனைகள் திரைக்காட்சிகளாக அமைந்தன. ஆனால் தமிழில் ஒரு தாய் இரண்டு குழந்தைகளோடு நிற்கும் சிலை இடம் பெற்றது. இப்பாடல் காட்சியில் இடம்பெற்ற இச்சிலை எம்.ஜி.ஆரின் தாயார் இரண்டு பிள்ளைகளோடு தமிழகத்திற்கு வந்து சிரமப்பட்டு பிழைத்து இருவரையும் சிறந்த நடிகர்கள் ஆக்கி திரையுலகில்

புகழ் பெறச் செய்ததை நினைவூட்டியது. “கண்களும் காவடி சிந்தாகட்டும்” என்ற முதல் பாடல் காட்சியில் எவ்வித அரசியல் பிரச்சாரமும் இடம்பெறவில்லை. ஆனால் தெலுங்கு படத்தில் பாடல் காட்சி ஆளும் கட்சியாக இருந்த காங்கிரசுக்கு ஆதரவான காட்சிகள் தொடர்ந்து காட்டப்பட்டன. இது பொதுவாக காதலின் மேன்மை, தனி மனிதனின் தன்னம்பிக்கை ஆகியவற்றை விளக்கும் பாடலாக அமைந்தது

ராமு எம்.ஜி.ஆரின் பயந்த சுபாவத்தையும் இப்பாடல் விளக்கிக் காட்டியது. நம்பியாரின் முறைப்பு, தங்கவேலுவின் ஆமாம் சாமி போடும் குணம் போன்ற கதாபாத்திரப் பண்புகளும் இப்பாடல் காட்சியில் காட்டப்பட்டன. பெண்களின் ஆட்டத்தைத் தன்னை மறந்து ரசிக்கும் நம்பியார் அதனை மேனேஜர் தங்கவேலு கவனித்து விட்டார் என்றதும் போலியாக தனது முகத்தில் ஒரு இறுக்கத்தை வரவழைத்துக் கொள்கிறார். இதில் இருந்து இவர் இரட்டை வேடதாரி, மாய்மாலக்காரர் ***[hypocrit]*** எனபது புலனாகிறது. மேனேஜரான தங்கவேலு தான் கவனித்ததாகக் காட்டிக் கொள்ளாமல் முதலாளியின் குணாதிசய மாற்றங்களுக்கு ஒத்துப் போகிறார். படத்தின் இரு






முக்கிய கதாபாத்திரங்களை இப்பாடலில் அறிமுகம் செய்கின்றனர்.

ராமு எம்.ஜி.ஆர். தங்களது ஜாமீனில் தொழிலாளர் விழா நடப்பதைக் காண ஆவல் இருந்தும் கொடுமைக்கார மாமாவுக்குப் பயந்து ஒளிந்தபடி வருவார். பெண்ணின் வசீகரத்தால் கவரப்பட்டு ஆச்சரியத்துடன் எல் விஜயலட்சுமியை ரசிப்பார்.

உள்ளங்கள் நேரான வழி காணட்டும்
உறுதியிலே துன்பம் தூளாகட்டும்
என்ன செய்வோம் என்ற நிலை மாறட்டும்
உன்னாலே மக்கள் எண்ணம் நிறைவேறட்டும்

என்ற வரிகள் ஒலிக்கும் போது பயந்த எம்.ஜி.ஆரின் முகம் காட்டப்படும். அப்போது ரசிகர்கள் கைதட்டி ஆரவாரம் செய்வர்.

மாமாவுக்கு பயந்து வாழும் ராமு எம்.ஜி.ஆர். படிப்பறிவோ உலக அனுபவமோ மனத்துணிவோ இல்லாதவர். அவர் எப்படி மக்களைக் காப்பாற்றுவார் என்ற வினா ரசிகர்கள் மனதில் எழவில்லை. எம்.ஜி.ஆர். என்றாலே காவல் தெய்வம்; மகிழ்ச்சியை வாரி வழங்கும் வள்ளல் என்ற எண்ணம் ரசிகர்கள் மனதில் ஆழப் பதிந்துவிட்டதால் படத்தில் வரும் கதாபாத்திரமாக அவரை நினைப்பது கிடையாது. கதாபாத்திரத்தின் இயல்பு என்னவாக இருப்பினும் இவர்களுக்கு எம்.ஜி.ஆர். ஆபத்பாந்தவன், அநாத ரட்சகன் மட்டுமே. எனவே பயந்து ஒளிந்து கொண்டிருக்கும் எம்.ஜி.ஆரின் முகத்தைப் பார்த்ததும் கைதட்டி ஆரவாரம் செய்வர்.



இளங்கோ எம்.ஜி.ஆர். அறிமுகம்

தெலுங்கு படத்தில் என்.டி.ஆர். பீமுடுவாக அறிமுகமாகும் காட்சி பீமனாக நாடகத்தில் நடிக்கும் காட்சியாக அமைந்தது. கதாபாத்திரத்தின் பெயர் பீமாராவ் என்பதால் பீமனாக அறிமுகம் ஆகிறார். தமிழில் எம்.ஜி.ஆருடைய கட்சியின் கொள்கைக்கு ஏற்ப அவர் ராமாயண மகாபாரத காட்சிகளில் நடிப்பத்தைத் தவிர்த்துவிட்டார். பெயரளவுக்கு கட்சியைப் பயன்படுத்திக் கொண்டவர் அல்ல எம்.ஜி.ஆர். கட்சியின் கொள்கைகளை தன் சொந்த வாழ்விலும் படத்திலும் பின்பற்றியவர். மற்ற திமுக நடிகர்களை விட எம்.ஜி.ஆர். மக்களிடையே செல்வாக்கு பெற்றதற்கும் எம்.ஜி.ஆர். வாயிலாக திமுக செல்வாக்கு பெற்றதற்கும் இதுவே காரணம் ஆகும் மற்ற நடிகர்கள் தமது வாழ்வில் கட்சிக் கொள்கைகளைப் பின்பற்றினர். மேடையில் நல்ல தமிழில் முழங்கினர். மேடையில் பிரச்சார

நாடகங்களில் நடித்தனர். ஆனால் படங்களில் வாய்ப்பும் வருமானமும் கருதி கட்சிக் கொள்கைகளை முழுமையாகப் பின்பற்றவில்லை. ஆனால் எம்.ஜி.ஆர். படத்திலும் சொந்த வாழ்க்கையிலும் திமுகவின் கொள்கைகளை பின்பற்றுவதில் கிஞ்சித்தும் சமரசம் செய்து கொண்டதில்லை. எனவே மக்கள் அவரை திமுகவின் பிரதிபிம்பமாகப் பார்த்தனர். அண்ணாவிடம் போய் 'நீங்க எம்.ஜி.ஆர். கட்சியா' என்று கேட்குமளவுக்கு மக்கள் மத்தியில் எம்.ஜி.ஆர். திமுகவின் அடையாளமாக ***[ICON]*** விளங்கினார்.

இளங்கோ ஒரு சினிமா படப்பிடிப்பில் ஸ்டன்ட் காட்சியில் நடிப்பதாக அறிமுக காட்சி அமைக்கப்பட்டது. படப்பிடிப்பு என்பதை மறந்து இளங்கோ எம்.ஜி.ஆர். எதிர்த்து நடித்தவர்களை உண்மையில் அடி அடி என்று அடித்து போடுவார். இக்காட்சி இரசிகர்களுக்கு சுவாரஸ்யமான அறிமுகக் காட்சியாக அமைந்தது. தெலுங்கு படத்தில் பீமுடு என்.டி.ஆர். கழுத்தில் கைக்குட்டையை கட்டிக் கொண்டு வருவதாகக் காட்டப்பட்டிருக்கும். ஆனால் தமிழில் இப்பழக்கம் இடம்பெறவில்லை,

இளங்கோவை அவர் அம்மா ஒரு அறைக்குள் அடைத்து போட்டு சாப்பாடு கொடுப்பார். வெளியே வருவதற்காக இளங்கோ எம்.ஜி.ஆர். அந்த அறைக்குள் பாம்பு வந்து விட்டதாக கத்தவும், அவரது அம்மா கதவை திறந்து விடுவார். உடனே எம்.ஜி.ஆர். அறையில் இருந்து தப்பித்து வெளியே ஓடி வந்துவிடுவார். அம்மா தன மகனது புத்திசாலித்தனத்தை நினைத்து வியந்து சிரித்தபடி 'என்னையே எமற்றிவிட்டாயா, இரு இரு

சாப்பாட்டுக்கு இங்கே தானே வருவாய்' என்று தனக்குள் பேசி சிரித்துக்கொள்வார். தெலுங்கு படத்தில் என்டிஆர் வெளியே ஓடி வரவும் அவரது அம்மா சுற்றி இருப்பவர்களைப் பார்த்து அவனைப் பிடியுங்கள் பிடியுங்கள் என்று சொல்லி பின்னாலேயே மற்றவர்களுடன் ஓடி வருவார். ஆனால் என்.டி.ஆர். அவ்வழியே வந்த லாரி ஒன்றில் ஏறி தப்பித்து போய்விடுவார். தமிழில் இக்காட்சி வைக்காததற்கு காரணம் அம்மாவை ஓடவிடக் கூடாது; களைப்படைய விடக் கூடாது.

மாப்பிள்ளை பார்க்கும் காட்சி - தமிழிலும் தெலுங்கிலும்

எங்க வீட்டுப்பிள்ளை படத்தில் ராமுவை மாப்பிள்ளை பார்க்க வரும் காட்சி படத்தின் முக்கிய காட்சியாகும். இக்காட்சி தெலுங்கில் ஒரு நாய் ராமுவைப் பார்த்துக் குரைத்ததும் ராமு பயந்து காபியைக் கொட்டி விடுவதாக காட்டப்படும். ஆனால் தமிழில் இந்த நாய் குரைக்கும் காட்சி கிடையாது. தமிழில் நம்பியார் அதட்டிய குரலில்



பயந்து எம்.ஜி.ஆர். பால் குவளையை தவற விட்டுவிடுவார். எம்.ஜி.ஆர். நடித்த அளவுக்கு தெலுங்கில் என்டிஆரின் நடிப்பு இக்காட்சியில் அமையவில்லை. இப்படத்தைப் இந்தியில் எடுத்தபோது திலிப் குமாரிடம் எங்க வீட்டுப் பிள்ளை படத்தை போட்டு காட்டினார். ராமு எம்.ஜி.ஆரின் பயந்த நடிப்பை பார்த்து அங்கு போய் திலிப் குமார் வெகுவாக பாராட்டினார். பின்பு அவர் 'எம்.ஜி.ஆர். நடித்த அளவுக்கு என்னால் நடிக்க இயலாது. நான் என்னால் ஆன முயற்சியைச் செய்கிறேன்' என்றார். இந்திப்படம் தமிழ்ப் படம் பெற்ற வெற்றியை அடையவில்லை அப்போதும் திலிப் குமார் இதே காரணத்தைச் சொல்லியிருக்கிறார். அவரது புகழ்ச்சி வெறும் வார்த்தைகள் அல்ல உண்மை என்பது அருகில் இருந்தவர்களுக்கு அப்போது புரிந்தது.

நகைச்சுவை நடிகரின் தோற்றமும் செயல்பாடும்

எம்.ஜி.ஆர். தனது படங்களில் தனக்குக் கொடுக்கும் முக்கியத்துவத்துக்கு நிகரான முக்கியத்துவத்தை வில்லனுக்கும் நகைச்சுவை நடிகருக்கும் கொடுப்பார். நகைச்சுவை நடிகர் [கதாநாயகனை] தன்னை உடல் வலிமை உடையவன் என்று காட்டுவதற்கும் வில்லன் தன்னை [கதாநாயகனை] நல்லவன் என்று காட்டுவதற்கும் நேரடியாக உதவுவர். எனவே இவ்விரு கதாபாத்திரங்களிலும் ஒவ்வொரு படத்திலும் அவர்களின் தோற்றத்திலும் செயல்பாடுகளிலும் புதுமைகளைப் புகுத்துவார். எங்க வீட்டுப் பிள்ளை படத்தில் நகைச்சுவை

காட்சிகள் மேற்கூறிய மனதில் வைத்து திட்டமிடப்பட்டு இருக்கும்.

நாகேஷின் தோற்றம், மீசை, உதட்டுக்கு வரையப்பட்ட சிவப்புச் சாயம், தலை கிராஃப்; அவருடைய மெலிந்த தோற்றத்தை மிகைப்படுத்தி காட்டக்கூடிய லூசான உடை. இவற்றுடன் ஒரு சிறிய கோடு போட்டதாக பேருக்கு ஒரு மீசை ஆகியவை அவரைப் பார்த்த மாத்திரத்திலேயே ரசிகர்களுக்குச் சிரிப்பை வரவழைக்கும். இது தவிர அவரை ஒரு உளறுவாயனாகக் காட்டி இருப்பதும் அவர் ஒவ்வொரு சொல்லையும் உளறி உளறித் தவறாகச் சொல்லுவதும் படம் பார்க்கும் ரசிகர்களுக்குச் ஒவ்வொரு காட்சியிலும் சிரிப்பை உண்டாகும். ஆனால் தெலுங்கில் இவ்வாறு கிடையாது. நகைச்சுவை நடிகர் தன் காதலியிடம் தான் ஒரு பெரிய நிறுவனத்தில் வேலை பார்ப்பதாக சொல்லி ஏமாற்றுவார். அவள் அதை உறுதிப்படுத்திக்கொள்ள விரும்புவாள் அப்போது தான் தன்னை தன்



தந்தையார் திருமணம் செய்து தருவார் என்பாள். எனவே அந்த நடிகர் பீமாராவிடம் வந்து தனது முதலாளியாக நடிக்கும்படி சொல்லவும் என் டி ஆர் பணக்காரனைப் போல வேடமிட்டுக் கொண்டு வருவார், அவர்கள் இருவரும் அந்தப் பெண்ணின் வீட்டுக்குப் போவார்கள். அவளது தந்தை ஜமீனின் மேனேஜர். அவர் பீமாராவைப் பார்த்ததும் தன் முதலாளிக்கு ஆள் அனுப்பி ராமு வந்திருப்பதாகத் தகவல் சொல்லி விடுவார். இப்போது பீமாராவ் ராமு ஆகிவிடுவார். தெலுங்கு படத்தில் அக்காவின் குழந்தையைப் பையனாக காட்டுவர்.

தமிழில் நாகேஷுக்கும் மாதவிக்கும் காதல் காட்சிகள் நகைச்சுவையுடன் திட்டமிடப்பட்டிருக்கும். அவர்களுடன் மற்றொரு நகைச்சுவை நடிகரான கே. ஏ. தங்கவேலுவும் சேரும் போது ரசிகர்களுக்கு சிரிப்பு இரட்டிப்பு ஆயிற்று.

ராமு இளங்கோ ஆனதில் எம்.ஜி.ஆருக்கான மாற்றம்

தெலுங்கு படத்தில் இன்னும் சில மாற்றங்கள் உண்டு. ராமு சாமியார் வேடத்தில் வருவதைப் பார்த்த கிராமத்து ஆட்கள் அழைத்துச் சென்று உங்கள் மகன் வந்து விட்டான் என்று அவர் அம்மாவிடம் ஒப்படைக்கின்றனர். அப்போது நான் பீமாராவ் இல்லை என் பெயர் ராமு என்று பலமுறை சொல்லியும் அங்கு இருப்பவர்கள் அதனை ஒப்புக் கொள்ள மறுக்கின்றனர். எல்லோரும் சேர்ந்து மந்திரவாதியை அழைத்து வந்து ஜக்கம்மாவுக்கு பூஜை போட்டு ராமுவுக்கு மந்திரிக்கின்றனர். அவர் முகத்தில் விபூதியை அடிக்கின்றனர். நீ யார் சொல்லு? உன் பெயர் என்ன? என்று மந்திரவாதி கேட்க ‘என் பெயர் ராமுடு’ என்கிறார். மந்திரவாதி

அடித்த உடனே அம்மா என்று அழுகிறார். அதன்பின்பு அடி தாங்க முடியாமல் தன்னை பீமாராவ் என்று சொல்வதாக அக்காட்சி நிறைவடைகிறது.

எம்.ஜி.ஆரின் திரைப்படக் கொள்கை

சாமியார், மந்திரவாதி, மந்திரித்தல் போன்ற காட்சிகள் தமிழில் இடம் பெறவில்லை எம்.ஜி.ஆர். மூடநம்பிக்கைகளை எதிர்த்துப் பிரச்சாரம் செய்துவந்த திமுகவில் இருந்த காரணத்தினால் இதுபோன்ற மூட நம்பிக்கையை வளர்க்கும் காட்சிகளைத் தன்னுடைய படத்தில் அவர் காண்பிப்பதில்லை. பல லட்சம் பேர் திரைப்படங்களைப் பார்ப்பதால் சமூகப் பொறுப்புணர்வுடன் நடந்து கொள்வதில் எம்.ஜி.ஆர். மிகுந்த அக்கறை காட்டினார். தனது படம் பார்க்கும் ரசிகர்கள் தன் படத்தை பார்ப்பதனால் நன்மைகள் பெற வேண்டுமே தவிர தீமைகளைப் பெறக்கூடாது. தீயவழியில் பகுத்தறிவுக்குப் புறம்பான பாதையில் அவர்கள் செல்வதற்கு தமது படம் வழி வகுக்கக்



கூடாது என்பதை தம் திரைப்படக் கொள்கையாக எம்.ஜி.ஆர். கொண்டிருந்தார். இதனால் எம்.ஜி.ஆர். தனது படத்தின் ஒவ்வொரு காட்சியையும் தனக்கானதாக மாற்றினார். உடைகளின் வண்ணத்தையும் தன்னுடைய நேரடி மேற்பார்வையில் வைத்துக் கொண்டார்.

நகைச்சுவை காட்சியில் தெலுங்குப்பட காமெடியனுக்கு ஹிட்லர் மீசை வைக்கப்பட்டது. மேனேஜர் வீட்டில் அவர் மேனேஜருடன் சேர்ந்து ‘தகுமா இது மாமா’ என்று பாட்டுப் பாடுவதாக ஒரு காட்சி இடம்பெற்றது. இக்காட்சியில் காமெடியனின் ஜோடி சேலை கட்டி தலை நிறைய பூ வைத்து நெற்றியில் பெரிய பொட்டு வைத்திருப்பார். ஆனால் தமிழில் நகைச்சுவை நடிகரான நாகேஷுக்கு ஜோடியாக வரும் மாதவி எப்போதும் பைஜாமா என்ற நவீன உடையை இறுக்கமாக உடுத்தி நாகரீக மங்கையாகக் காட்சி தருவார். தெலுங்கு படத்தில் காமெடியனுக்கு இரண்டு பாட்டு உண்டு. நகைச்சுவை நடிகர் தனது ஜோடி நடிகையுடன் ‘சரசா சரசா சிகரெட்டு’ என்ற சிகரெட் பிடிக்கும் பாடல் காட்சி இடம்பெற்றது. அப்பெண் சிகரெட்டின் தீமைகளை எடுத்துச் சொல்வதாக இப்பாட்டு அமைந்தது. தமிழில் நகைச்சுவை நடிகரான நாகேஷுக்கு ஒரு பாட்டு கூட கொடுக்கப்படவில்லை.

ஜோடி நடிகைகள்

தெலுங்கு படத்தில் என் டி ஆரின் ஜோடியாக வரும் ஜமுனா கனவுக் காட்சியில் கையில்லாத ரவிக்கை போட்டு வருவார். ஆனால் தமிழில் எம்.ஜி.ஆருக்கு ஜோடியாக நடித்த சரோஜாதேவி ஒரு

பாட்டில் கூட கை இல்லாத ஜாக்கெட் அணிவது கிடையாது. எம்.ஜி.ஆர். சில உடைக் கட்டுப்பாடுகளைப் பின்பற்றியதை போன்று சரோஜாதேவியும் பின் வரும் சில உடைக் கட்டுப்பாடுகளைப் பின்பற்றினார். அவர் கையில்லாத ரவிக்கை அணிவதில்லை; நீச்சல் உடை அணிந்து நடிப்பதில்லை, முழங்காலுக்கு மேலே உள்ள குட்டை பாவாடை அணிவதில்லை. எனவே இப்படத்தில் ஜமுனாவை போல கையில்லாத 'ரவிக்கை' அவர் அணியவில்லை. தெலுங்கில் பீமா ராவுக்கு ஜோடியாக எல் விஜயலட்சுமி நடித்தார். தமிழில் இவர் முதல் பாடல் காட்சியில் மட்டும் இடம் பெற்றார். தமிழில் இளங்கோ எம்.ஜி.ஆருக்கு சரோஜா தேவியும், ராமு எம்.ஜி.ஆருக்கு ரத்னாவும் ஜோடியாக நடித்தனர். ரத்னா ஜி வரலட்சுமியின் சகோதரி மகள். நல்ல உயரமும் எடுப்பான தோற்றமும் கொண்டவர். தொழிலாளி படத்தில் எம்.ஜி.ஆருக்கு ஜோடியாக நடித்தார். குதிரை ஏற்றப் பயிற்சியின் போது முதுகெலும்பில் அடிபட்டதால் அவர் அதன் பிறகு பல ஆண்டுகள் படங்களில் நடிக்கவில்லை. பின்பு எம்.ஜி.ஆர். நடித்த இதயக்கனி படத்தில் "நீங்க நல்லா இருக்கணும் நாடு முன்னேற" பாட்டுக்கு நடனம் ஆடினார்.

கதை ஒன்று காட்சிகள் வேறு

தெலுங்கு படத்தில் இருந்த காட்சிகளை தமிழில் அப்படியே படம் ஆக்காமல், தமிழில் எம்.ஜி.ஆர். நடிப்பதால் அவருடைய கட்சி கொள்கைகளுக்கு ஏற்றவாறு காட்சிகள் மாற்றியமைக்கப்பட்டன. நகைச்சுவை காட்சிகள் கூட தெலுங்கை விடத் தமிழில் மிகச் சிறப்பாக

அமைந்தன. தெலுங்கு படத்தில் பீமா ராவுக்கு அம்மாவாக நடித்த ருஷயேந்திரமணி தமிழிலும் இளங்கோவுக்கு அம்மாவாக நடித்தார். மற்றவர்கள் தமிழில் புதியவர்களே. வாணிஸ்ரீயிடம் ஒரு நிருபர் பேட்டி எடுத்தபோது 'நீங்கள் தமிழில் எம்.ஜி.ஆர். மற்றும் சிவாஜியுடன் நடித்திருக்கிறீர்கள். இருவரோடும் நடித்ததில் என்ன வித்தியாசத்தை உணர்ந்தீர்கள்' என்று கேட்டார் அதற்கு, வாணிஸ்ரீ, 'சிவாஜி படத்தில் பலரும் நடித்திருப்போம் அந்தப் படத்தின் வெற்றிக்கு அதில் இடம் பெற்ற பலருக்கும் பங்கு உண்டு. ஆனால் எம்.ஜி.ஆர். படத்தின் வெற்றிக்கு எம்.ஜி.ஆர். மட்டுமே காரணமாவார். அப்படத்தில் வேறு எவர் நடித்திருந்தாலும் அதில் அவர்களைப் பற்றிப் பேச பெரிதாக விஷயம் எதுவும் இருக்காது' என்று பதிலளித்தார். இவருடைய இக்கூற்று எங்க வீட்டுப் பிள்ளைக்கும் பொருந்தும்.

எம்.ஜி.ஆரின் மொழிமாற்றப் படக் கொள்கை

*தெலுங்கு படத்தை பார்த்து எடுத்த படம் என்றாலும் கூட படம் முழுக்க முழுக்க எம்.ஜி.ஆரைச் சுற்றியே காட்சிகள், பாடல், வசனம் என அனைத்தும் அமைந்திருக்கும். பிற மொழிகளில் இருந்து படங்களை எடுத்து தமிழில் ஒலிபெயர்ப்பு **[dubb]** செய்தாலும் றி மேக் செய்தாலும் எம்.ஜி.ஆர். தனது கட்சி கொள்கை தனிப்பட்ட கொள்கை என்ற இரண்டுக்கும் பொருத்தமாக மாற்றி அமைப்பார். கட்சிக் கொள்கை அவருடைய சுய பிம்பம், திரைப்படக் கொள்கை ஆகியவற்றில் அதிகக் கவனம் செலுத்தியதால் அவருடைய திரையுலக*



வரலாற்றில் எங்க வீட்டு பிள்ளை முக்கிய இடத்தைப் பெறும் வகையில் மிகப்பெரிய வெற்றியைப் பெற்று வெள்ளி விழாப் படமாக அமைந்தது. பல ஊர்களிலும் வெள்ளிவிழா கொண்டாட்டத்தில் எம்.ஜி.ஆர். நம்பியார் கதாநாயகிகள் நாகேஷ்

ஆகியோர் கலந்துகொண்டனர். திரையரங்கத்துக்கு வந்து மேடையில் காட்சியளித்தனர். ரசிகர்கள் முன்பு பேசினார் எம்.ஜி.ஆர்.

தெலுங்கு எம்.ஜி.ஆர்.

தெலுங்கில் என்டிஆர் நடித்த படங்களைத் தமிழில் தேவையான மாற்றங்களைச் செய்து எம்.ஜி.ஆர். அதிக எண்ணிக்கையில் நடித்தார். அது போல என் டி ஆரும் இங்கு முதலில் வந்த தமிழ்ப் படங்களை தெலுங்கில் மாற்றி நடித்தார். அதிகமான சிவாஜி படங்களைத் தெலுங்கில் மொழி மாற்றி ஏ. என். நாகேஸ்வர ராவ் நடித்தார். இதனால் என் டி ஆரை தெலுங்கு எம்.ஜி.ஆர். என்றும் நாகேஸ்வர ராவை தெலுங்கு சிவாஜி என்றும் தெலுங்கு ரசிகர்கள் அழைத்தனர். என் அண்ணன் போன்ற ஒரு சில படங்கள் தெலுங்கில் நாகேஸ்வரராவ் நடித்த ஒரு படங்களின் தமிழ்ப் பதிப்பாகும். படங்களில் என் டி ஆர், எம்.ஜி.ஆர். ஆகிய இருவருக்கும் பாத்திர அமைப்பு ஏறத்தாழ ஒன்று போல இருப்பதனால் ரசிகர்களை இவர்கள் மிகவும் கவர்ந்தனர். என் டி ஆர் கிருஷ்ணர், ராமர் போன்ற சாமி வேடங்களில் நடித்ததால் ஆந்திர மக்களிடையே அவர் தெய்வ அவதாரமாகவும் கருதப்பட்டார். எனவே இவர்கள் இருவரும் தனிக்கட்சி தொடங்கி தத்தம் மாநிலத்தின் முதல்வர் ஆவதற்கும் இவர்களின் திரையுலகக் கதாபாத்திரங்கள் உறுதுணையாக இருந்தன. இவ்வகையில் தெலுங்கில் என்டிஆர் நடித்த ராமுடு பீமுடு என்ற படம் தமிழில் எம்.ஜி.ஆர். நடித்த எங்க வீட்டுப் பிள்ளை பெயரில் வெளிவந்து தமிழகத்தின் முக்கிய நகரங்களில் வெள்ளிவிழா படமாக வெற்றிக் கொடி நாட்டியது.

பாடல்கள்

"உந்திலே மஞ்சு காலம்" எனத் தொடங்கும் முதல் பாடல் காங்கிரஸ் ஆட்சியில் நல்ல காலம் வந்தது என்ற பொருளில் அமைந்திருந்தது. இப்பாட்டு கட்சியில் வெள்ளையரின் கொடி இறக்கப்பட்டு, இந்தியாவின் தேசியக்கொடி ஏறுகின்ற காட்சி இடம்பெற்றது. தமிழில் இப்பாடல் படம் பார்ப்பவர்களை வசீகரிக்கும் ஒரு காதல் பாடலாக "கண்களும் காவடி சிந்தாகட்டும் காளையர் நெஞ்சத்தை பந்தாடட்டும்" எனத் தொடங்குவதாக அமைந்தது. இப்பாடலுக்கு பெண்கள் மட்டுமே ஆடினர். பெண்களே ஆண்கள் வேடம் போட்டு பாடல் ஒரு சரணத்துக்கு மட்டும் ஆடினர்.

"தெலீஸிந்திலே" எனத் தொடங்கும் பாடல் தமிழில் இளங்கோ எம்ஜியாரும் சரோஜா தேவியும் 'குமரிப்பெண்ணின் உள்ளத்திலே' எனத்தொடங்கும் பாடலாக இடம்பெற்றது. ராமுடுவும், எல் விஜயலட்சுமியும் பாடுகின்ற "ஓ தழுக்கு தலுக்கு



மணி” என்ற பாடல் காட்சி தமிழில் இளங்கோ எம்.ஜி.ஆரும் ரத்னாவும் பாடுகின்ற, “நான் மாந்தோப்பில் நின்றிருந்தேன் அவன் மாம்பழம் வேண்டுமென்றான்” என்ற நீண்ட பாடலாக அமைந்தது. இப்பாட்டு டபுள்சைடு ப்ளேட் என்று சொல்லப்படுகின்ற ஆறு நிமிடங்கள் இடம்பெறும் மிகநீண்ட பாடலாகும்.

தெலுங்கில் பீமாராவ் தன் அக்காள் கணவனை சாட்டையால் அடிக்கும் காட்சி இடம்பெற்றது. ஆனால் அதன் பிறகு பாடல் எதுவும் இடம்பெறவில்லை. ஆனால் தமிழில் சாட்டையை வைத்துக்கொண்டு எம்.ஜி.ஆர். பாடும் “நான் ஆணையிட்டால் அது நடந்து விட்டால் ஏழைகள் வேதனை படமாட்டார்” என்ற பாடல் பட்டி தொட்டி எங்கும் மக்களைப் பரவசப் படுத்திய உற்சாகத்தின் ஊற்றுப் பாடலாக அமைந்தது. திமுக கட்சி ஆட்சிக்கு வருவதற்கு அச்சாரம் அமைத்துக் கொடுத்த பாடலாக அமைந்தது. இப் பாடலை இலங்கை அரசு விடுதலைப்புலிகளுக்கு ஆதரவாக இருப்பதாகக் கருதி தனது வானொலியில் ஒலிபரப்பத் தடை விதித்தது. தமிழில் சரோஜாதேவியும் ரத்னாவும் பாடுகின்ற சோகப்பாடல் தெலுங்கில் இடம்பெறவில்லை.

ராமுடு பீமுடு என்ற பெயரில் என்டிஆரின் மகன் பாலகிருஷ்ணா நடித்து இன்னொரு படமும் வெளிவந்து மிகப்பெரிய வெற்றியை பெற்றது. இப்படத்தின் கதையை வி.சி குகநாதன் எழுதியிருந்தார். பாலகிருஷ்ணாவுக்கு ஜோடியாக ராதாவும் சுஹாசினியும் நடித்தனர். இப்படத்தின் கதை பிறக்கும்போதே பிரிந்து போன இரட்டை



சகோதரர்கள் வளர்ந்தபிறகு இணைந்து சிக்கலில் சிக்கித் தவித்த தன் பெற்றோரை சேர்ந்ததாக அமைந்தது. இது கிட்டத்தட்ட குடியிருந்த கோயில் படத்தின் கதையை ஒத்ததாகும்.

தமிழில் ஆள் இடம் மாறி அங்கிருக்கும் பிரச்னைகளைச் சரி செய்யும் இதே கதையில் பல படங்கள் வந்து விட்டன. எ வி எம் ராஜன் முதலான பல நடிகர்கள் இக்கதையில் நடித்தாலும் எங்க வீட்டு பிள்ளையின் வெற்றியை எந்தப்படமும் பெறவில்லை. இடம் மாறும் ஆளை பெண் கதாபாத்திரமாக மாற்றி வாணி நடித்து வாணி ராணி என்றும் ஜெயலலிதா நடித்து வந்தாளே மகராசி போன்ற படங்கள் வந்தன. ரசிகர்கள் இக்கதையை வெகுவாக ரசித்தனர் அதனால் தொடர்ந்து இந்தக் கதை படமாக்கப்பட்டு வருகிறது.

2. வெற்றிக்கான அரசியல் பின்னணி

1962இல் எம்.ஜி.ஆர். தேர்தல் பிரச்சாரத்துக்கு வந்த பிறகு திமுகவுக்கு தமிழ்நாட்டில் செல்வாக்கு உயர்ந்தது. காங்கிரஸ் பலம் குறைந்ததை கவனித்த காமராஜர் தன்னுடைய முதல்வர் பதவியில் இருந்து விலகி கட்சி பணிகளில் ஈடுபடுத்திக் கொண்டார். அகில இந்திய காங்கிரஸ் கட்சிக் கமிட்டி தலைவராகி அவர் தேசியப் பொறுப்புகளை டெல்லியில் இருந்து கவனித்துக் கொண்டார். இங்கு பக்தவத்சலம் முதல்வர் ஆனார். இரண்டாண்டுகளில் தமிழகத்தில் அரிசிப் பஞ்சம் ஏற்பட்டது பத்வத்சலத்தால் அதை சமாளிக்க இயலாமல் மக்களின் கடுங்கோபத்துக்கு ஆளானார். இவ்வேளையில் திமுக வலுவாக களப் பணியில் ஈடுபட்டது. எம்.ஜி.ஆரின் படங்கள் அவர்களுக்கு ஊக்கமும் உற்சாகமும் ஊட்டின.

1964இல் தைப் பொங்கல் அன்று வேட்டைக்காரன் வெளிவந்தது முதல் என் கடமை, பணக்கார குடும்பம், தெய்வத்தாய், தொழிலாளி, படகோட்டி என்று வரிசையாக பல படங்கள் ரசிகர்களின் ஆதரவைப் பெற்று திமுகவின் செல்வாக்கை மக்கள் மத்தியில் உயர்த்தியது. இவற்றைத் தொடர்ந்து 1965 ஜனவரி 14 அன்று தை

பொங்கல் அன்று எங்க வீட்டுப் பிள்ளை திரைக்கு வந்தது. எங்க வீட்டு பிள்ளையில் நான் ஆணையிட்டால் பாட்டு காங்கிரசுக்கு சவுக்கடியாக அமைந்தது. ஒரு பாட்டில் எதிர்க்கட்சியைக் கதி கலங்க வைத்து விட்டார் எம்.ஜி.ஆர். இப்படத்தை தொடர்ந்து வந்த பானம் படைத்தவன் படத்தில்

'கண் போன போக்கிலே கால் போகலாமா
கால் போன போக்கிலே மனம் போகலாமா
மனம் போன போக்கிலே மனிதன் போகலாமா
மனிதன் போன பாதையை மறந்து போகலாமா'

என்ற பாட்டில் எம்.ஜி.ஆர். 'மனிதன் போன பாதையை மறந்தும் போகலாமா' என்ற வரியும் அப்போது காந்தியடிகள் நடந்து போகும் படத்தை காட்டியதும் காந்தியடிகள் காட்டிய பாதையைக் காங்கிரசார் மறந்து விட்டனர் என்ற குற்றச்சாட்டை மக்கள் முன்னிலையில் வைத்தது. அடுத்து வந்த ஆயிரத்தில் ஒருவன் படமும் வண்ணப்படமாக வந்து மக்கள் மனதை முழுமையாக எம்.ஜி.ஆர். மற்றும் அவர் சார்ந்திருக்கும் திமுகவின் பக்கம் திருப்பிவிட்டது.

1967 தேர்தல் பிரச்சாரத்துக்கு வந்த காமராஜர் 'வேட்டைக்காரன் வருவான் ஓட்டு போட்டுராதிங்க' என்று சொல்லும் அளவுக்கு எம்.ஜி.ஆர். படங்கள் மக்கள் மத்தியில் திமுகவின் ஆதரவு ஓட்டுக்களாக மாறி இருந்தன. 1967 தேர்தலில் திமுகவின் வெற்றிக்கு எம்.ஜி.ஆரின் படங்களும் குறிப்பாக எங்க வீட்டுப் பிள்ளையும் அதிலும் குறிப்பாக நான் ஆணையிட்டால் பாட்டும் முக்கிய காரணங்கள் ஆகும்.



அரசியல் படம்

எங்க வீட்டுப் பிள்ளை படத்தில் எம்.ஜி.ஆர். நடித்ததால் அது ஒரு அரசியல் படமாக அமைந்துவிட்டது. அதில் இடம் பெற்ற நான்

ஆணையிட்டால் பாட்டும் அப்படத்தின் கருத்தை காங்கிரசுக்கு எதிராக திருப்பிவிட்டது. வேறு எவர் நடித்திருந்தாலும் இப்படம் இதன் பிறகு இதனை அடியொற்றி வந்த கதாநாயகனோ கதாநாயகியோ இடம் மாறும் மற்ற இரட்டை வேடப் படங்களை போல சாதாரண வெற்றிப் படமாகவே இருந்திருக்கும். ஆனால் எம்.ஜி.ஆரும் அவரது சாட்டையடிப் பாடலும் படத்தை அரசியல் கருத்து உடையதாக புரிந்துகொள்ள உதவியது. கதையின் கருத்து ஆட்சிக்கு எதிராக திரும்பும் வகையில் காட்சிகளும் புரிந்து கொள்ளப்பட்டன.

கதையில் வரும் ஒவ்வொரு கதாபாத்திரமும் நிஜத்தில் வாழும் ஒரு கூட்டத்தின் பிரதிநிதியாக அடையாளம் காணப்பட்டனர். அதனால் ஏழை பணக்காரர் ஆண் பெண் குழந்தை என சமுகத்தில் காணப்பட்ட ஒவ்வொருவரும் தன்னை இப்படத்தின் ஒரு கதாபாத்திரத்துடன் இணைத்துக் கொண்டனர். இறுதியில் இளங்கோவைப் பார்த்து நம்பியார் அவனும் எங்க விட்டு பிள்ளை தான் என்று சொல்லும் போது அவரும் மன்னிக்கப்பட்டார். ஒவ்வொரு வீட்டுக்கும் ஒரு இளங்கோ வந்து சீர்திருத்தங்களைச் செய்ய மாட்டாரா என்ற ஏக்கம் நிலைத்தது. இப்படத்தினால் எம்.ஜி.ஆர். வந்தால் நல்லது நடக்கும் என்ற நம்பிக்கை விதை ஆழமாக மக்கள் மனதில் ஊன்றப்பட்டது. இந்த விதை விருட்சமாகி 1972இல் அண்ணா திமுக கட்சியாக ரசிகர்களால் உதயமாயிற்று. எம்.ஜி.ஆர். யோசிக்க நேரமின்றி பொது செயலாளர் ஆக்கப்பட்டார். ரசிகர்கள் புதிய கட்சி தொடங்குவோம் என்று முன்வந்த போது அவரால் மறுக்கவோ கால அவகாசம் கேட்கவோ முடியவில்லை. ரசிகர்கள் அவரை



நம்பினர். நல்லவர்கள் எல்லாம் அவரை நம்பினர். ஆயுள் முழுக்க அவரை முதல்வர் நாற்காலியில் வைத்து ஆட்சியும் அதிகாரமும் கொடுத்து அழகு பார்த்தனர். படங்களில் எம்.ஜி.ஆரை கதாநாயகனாக ரசித்த மக்கள் அவர் முதல்வராக இருப்பதையும் ரசித்தனர். .

வெள்ளி விழா

எங்க வீட்டுப் பிள்ளை படம் 1965 இல் பொங்கல் ரிலீசாக வெளிவந்தது. இப்படம் தமிழகத்தில் 7 திரையரங்குகளில் வெள்ளி விழா கொண்டாடியது. வெள்ளிவிழா என்பது அக்காலத்தில் 250 நாட்கள் ஆகும். எம்.ஜி.ஆர். முதன்முதலாக சமூகப் படத்தில் இரட்டை வேடம்

ஏற்று நடித்த படம் எங்க வீட்டுப் பிள்ளை. அதற்குமுன்பு நாடோடி மன்னன் படத்தில் அவர் இரட்டை வேடம் ஏற்று நடித்திருந்தார். இப்படம் சென்னையில் காசினோ, பிராட்வே, மேகலா என்ற 3 திரையரங்குகளில் வெளியிடப்பட்டது. மதுரையில் சென்ட்ரல் திரையரங்கில், திருச்சியில் ஜூபிடர் திரையரங்கிலும், கோவையில் திரையரங்கிலும், தஞ்சாவூரில் யாகப்பா என்ற திரையரங்கிலும் இப்படம் வெளியாயிற்று. அனைத்து முக்கிய நகரங்களிலும் வெற்றி விழா கொண்டாடப்பட்டது.

கோவையில் மேடையில் எம்.ஜி.ஆருக்கு இரண்டு மைக்குகள் வைக்கப்பட்ட போது நம்பியார் 'இது என்ன அநியாயம்? எல்லோருக்கும் ஒன்று; இவருக்கு மட்டும் என்ன இரண்டு மைக்? என்று கேட்டார். எம்.ஜி.ஆர். சிரித்தபடியே 'நான் இரட்டை வேடங்களில் நடித்திருக்கிறேன்' என்று மைக்கில் பதில் கூறினார். கூட்டம் சிரித்து எம்.ஜி.ஆரைக்



வெற்றிவிழா மேடையில் எம்.ஜி.ஆர்., ரத்னா, சரோஜா தேவி, நம்பியார்

கொண்டாடியது. அடுத்து பணம் படைத்தவன் படம் வெளியாகி ஓடிக்கொண்டிருந்த நிலையிலும் எங்க வீட்டு பிள்ளை நல்ல வசூலை அள்ளித் தந்தது. பணம் படைத்தவன் கல்கத்தாவில் எடுக்கப்பட்ட்ட படம்; எம்.ஜி.ஆர். தொடக்கத்திலேயே விளையாட்டு வீரராக வந்து வெற்றி கோப்பைகளைக் குவிப்பார்.

'பவளக்கொடியிலே முத்துக்கள் பூத்தால்' என்ற பாட்டு மினியேச்சர் முறையில் தாஜ் மகாலில் எடுக்கப்பட்டதாகக் காட்டப்பட்டது. எம்.ஜி.ஆரும் கே ஆர் விஜயாவும் ஷாஜஹான் மும்தாஜாக வேடமிட்டு இப்பாடல் காட்சியில் நடித்திருந்தனர். இத்துணைச் சிறப்புகளுடன் இப்படமும் வெற்றி வாகை சூடியது.

எங்க வீட்டுப் பிள்ளைக்கு ஐம்பதாவது ஆண்டு ரிலிஸ் தினம் என்ற பெயரில் வெற்றி விழா கொண்டாடினர். அப்போதும் அப்படம் திரையரங்கில் நல்ல இலாபத்தை கொடுத்தது.




ஐம்பதாவது ஆண்டு ரிலிஸ் தினம் -
ஜெயந்தி கண்ணப்பன், சரோஜா தேவி, ரத்னா

எம்.ஜி.ஆர். நம்பியார் நாகேஷ் இல்லாத நிலையில் இவ்விழாவில் சரோஜாதேவி, ரத்னா ஆகியோர் கலந்து கொண்டனர். இன்றும் என்றும் திரையரங்கில் எங்க வீட்டுப் பிள்ளை நல்லா வசூலைக் கொடுக்கிறது.

இலாபத்தில் ஒரு பகுதியைக் கொடுத்த எம்.ஜி.ஆர்.

எம்.ஜி.ஆர். சென்னை, செங்கல்பட்டு, காஞ்சிபுரம் ஆகிய ஊர்களின் வினியோக உரிமையை எம்.ஜி.ஆர். பிக்சர்ஸ் மூலமாக பெற்றிருந்தார். அதிக நாட்கள் கூடுதல் வசூலைப் பெற்றதால் அவர் எதிர்பார்த்த லாபத்தை விட கூடுதலான லாபம் கிடைத்தது. அதனால் அவர் அந்தக் கூடுதல் லாபத்தின் ஒரு பகுதியை தயாரிப்பாளருக்குக் கொடுக்க விரும்பினார். பொதுவாக இலாபம் அதிகமாக வரும் போது யாரும் அதனை மற்றவருக்குக் கொடுப்பது கிடையாது. எம்.ஜி.ஆர். எதிர்பார்த்த இலாபத்தை விட கூடுதலாகக் கிடைத்ததனால், படத்தின் தயாரிப்பாளருக்கு ஒரு தொகையைக் கொடுக்க வேண்டும் என முடிவு செய்து அத்தொகைக்கான காசோலையை நாகிரெட்டிக்குக் கொடுத்தனுப்பினார். ஆனால் தயாரிப்பாளர் அதனை வாங்க மறுத்துவிட்டார். படம் விநியோகம் செய்த பிறகு அதன் இலாபமும் நஷ்டமும் வாங்கியவருக்கே சேரும் அதில் பங்கு பெறுவது முறையல்ல என்று கூறி மறுத்து விட்டார். இத் தகவலைக் கேட்டதும் எம்.ஜி.ஆர். ‘சரி நீங்கள் பெற்றுக் கொள்ளாவிட்டாலும் பரவாயில்லை, உங்கள் ஸ்டூடியோவில் பணிபுரியும் பணியாளர்களுக்கு இத்தொகையை பகிர்ந்து கொடுத்துவிடுங்கள்’ என்று


வெள்ளி விழா ஓடிய ஒரே படமான
எங்க வீட்டுப் பிள்ளை.
225-நாட்கள் பகல் காட்சியுடன் 236-நாட்கள் ஓடி
வசூலில் இன்றுவரை தகர்க்க முடியாத
சாதனை செய்த படமாக திகழ்கிறது.

236—நாட்கள் (ஜுபிடர்)—ரூபாய்		3,36,407-26
12—நாட்கள் (பத்மாமணி)—,,		24,552-74
248—நாட்கள் மொத்த வசூல்—ரூ		3,60,960-00

(தொடர்ந்து பத்மாமணியில் 12-நாட்கள் ஓடியது
குறிப்பிடத்தக்கது.)

வேண்டிக்கொண்டார். எம்.ஜி.ஆர். கொடுத்த காசோலை தொகை எங்க வீட்டு பிள்ளை படப்பிடிப்பு நடந்த விஜயா வாகினி ஸ்டூடியோ பணியாளர்களுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டது.

தனக்குக் கிடைத்த இலாபத்தை இன்னொரு நிறுவனப் பணியாளருக்குப் பங்கு கொடுக்கும் நற்பண்பு எம்.ஜி.ஆரைத் தவிர வேறு எவரிடமும் காண இயலாத தனிப்பண்பு ஆகும். இருவருமே இலாபத்தைத் தமக்குரியது எனக் கருதி தானே அனுபவிக்க வேண்டும் என்று நம்புவது இயற்கை. கலியுகம் பிறக்கும் முன்பு நடந்த கதையை போல் இருக்கிறது இருவரும் நடந்துகொண்ட விதம். ஆனால் எம்.ஜி.ஆர். இலாபத்தைப் பிறரோடு பகிர்ந்து கொண்டும், கஷ்டத்தைத் தன்னுடையதாக்கிக் கொண்டும் வாழ்கின்ற பொதுநலப் பண்பு உடையவர். இப் பொதுநலப் பண்பிலும் கொடைப் பண்பிலும் எம்.ஜி.ஆர். மற்றவர்களை விட தனித்தும் வேறுபட்டும் திகழ்கிறார்.

தேர்தலும் படமும்

தஞ்சாவூரில் யாகப்பா திரையரங்கில் எம்.ஜி.ஆருடைய படங்கள் வெளிவந்தன. அந்த திரையரங்கம் பரிசுத்த நாடார் என்பவரின் தந்தைக்குச் சொந்தமான திரையரங்கம் ஆகும். அவர் 1962 ஆம் ஆண்டு நடந்த பொதுத் தேர்தலில் கலைஞரை எதிர்த்துப்

போட்டியிட்டார். அப்போது அங்குப் பிரச்சாரத்துக்குச் சென்ற எம்.ஜி.ஆர். மக்களைப் பார்த்து 'நீங்கள் யாருக்கு ஓட்டுப் போடுவீர்கள்' என்று கேட்டார். மக்கள் அவரிடம் 'நாங்கள் ஐயாவுக்கு தான் ஓட்டு போடுவோம்' என்றனர். அவர்கள் ஐயா என்றது பரிசுத்த நாடாரை குறித்துச் சொன்னதாகும். அதனைப் புரிந்து கொண்ட எம்.ஜி.ஆர்., ஐயா, வேறு கட்சியில் நிற்கின்றார். நீங்கள் நான் சார்ந்திருக்கும் திமுக




கட்சியை சேர்ந்த கருணாநிதி அவர்களுக்கு உதயசூரியன் சின்னத்தில் வாக்களித்து வெற்றி பெறச் செய்ய வேண்டும் என்று இருகரம் கூப்பி கேட்டுக்கொண்டார். அதுவரை பரிசுத்த நாடார் அவர்களுக்கு ஓட்டுப் போட வேண்டும் என்று முடிவு செய்திருந்த மக்கள் எம்.ஜி.ஆர். கேட்டுக் கொண்டதும் தங்கள் முடிவை மாற்றி திமுகவுக்கு வாக்களித்து கருணாநிதியை பெரும் வெற்றி பெறச் செய்தார்கள். எம்.ஜி.ஆரால் பரிசுத்த நாடார் தோற்றுப் போனாலும் கூட அடுத்த மூன்றாவது ஆண்டில் 1965ல் எங்க வீட்டுப் பிள்ளை படத்தை இவரது யாகப்பா திரையரங்கில் வெளியிட்டு நல்ல இலாபத்தைப் பெற்றார். எனவே எம்.ஜி.ஆரை நம்பிக்கெட்டவர் எவருமில்லை என்ற வாக்கு உண்மையாயிற்று.

எங்க வீட்டுப் பிள்ளையும் காங்கிரஸ் ஆட்சியும்

எங்க வீட்டு பிள்ளை படம் காங்கிரஸ் ஆட்சிக்காலத்தில் வெள்ளி விழா கொண்டாடியது. இப்படத்தில் மாஞ்சோலை எஸ்டேட் முதலாளியாக வரும் நம்பியார் தன்னுடைய தொழிற்சாலையில் வேலை பார்க்கும் தொழிலாளிகளை கொடூரமாக நடத்துவதை அக்காலத்தில் மேட்டுக் குடியைச் சேர்ந்த காங்கிரஸ் கட்சி முதலாளிகள் தொழிலாளிகளிடம் இரக்கமில்லாமல் நடந்து கொள்வதற்கு இணையாகக் கொள்ளப்பட்டது. படம் பார்த்தவர்கள் எம்.ஜி.ஆரை திமுகவின் பிரதிநிதியாகவும் நம்பியாரை காங்கிரஸின் பிரதிநிதியாகவும் கருதும் வகையில் கதை அமைப்பும் கதாபாத்திர உருவாக்கமும் இருந்தன.

பிற்காலத்தில் ஈழத்தமிழர்கள் தமக்கென தனி நாடு வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து போராடியபோது இலங்கை வானொலியில் எங்க வீட்டுப் பிள்ளையில் வரும் "நான் ஆணையிட்டால் அது நடந்து விட்டால் இங்கு ஏழைகள் வேதனை படமாட்டார்" பாட்டினை ஒளிபரப்ப தடை செய்தனர். இப்படம் தமிழகத்தில் வெளியானபோது இப்பாட்டு எம்.ஜி.ஆர். என்னும் மேசியா



வருகையை உறுதி செய்யும் பாட்டாக விளங்கியது. திமுக ஆட்சிக்கு வந்து அதிகாரத்தைப் பெற்றுவிட்டால் இங்கு ஏழைகளின் கண்ணீர் துடைக்கப்படும், எவரும் வேதனைப்பட மாட்டார் என்ற நம்பிக்கையை விதைக்கும் வகையில் இப்பாட்டின் கருத்து அமைந்திருந்தது.

காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் அரிசிப் பஞ்சமும் மக்களிடையே மிகப்பெரிய அளவில் அதிருப்தியை உருவாக்கி இருந்தது. மேலும் காங்கிரஸில் இருந்த சில பணக்காரர்களும் உயர் ஜாதிக்காரர்கள் பெரிய பொறுப்புகளை தம் வசம் வைத்து கொண்டு ஏழைகளை மிகுந்த சிரமத்திற்கு உள்ளாக்கினர். ஏழைகளின் அடிப்படைத் தேவைகள் கூட பூர்த்தி செய்யப்படாத நிலையில் சுதந்திரம் கிடைத்து என்ன பயன் என்று அவர்கள் மனம் சலிப்படையும் வகையில் காங்கிரஸ் ஆட்சி நடந்தது. இதனால் காமராஜர் மக்களிடையே கட்சியை பலப்படுத்த வேண்டும் ஆட்சியின்மீது மக்களுக்கு நம்பிக்கையை ஏற்படுத்த வேண்டும் என்ற எண்ணத்தில் தனது முதலமைச்சர் பதவியை ராஜினாமா செய்துவிட்டு கட்சியை வலுப்படுத்தும் பணியை ஏற்றுக்கொண்டார். பக்தவச்சலம் முதல் மந்திரி ஆனார். எங்க வீட்டுப் பிள்ளை படம் திமுக ஆட்சி பீடம் ஏறுவதற்காக அடிக்கல்லை நாட்டியது.

பணக்காரப்பெண்ணின்அப்பாவித்தனம்

எங்க வீட்டுப் பிள்ளை படம் வெளிவந்த காலத்தின் சமூகச் சூழ்நிலையை இப்படம் மிகச்சரியாக எடுத்துக் காட்டியது. அக்காலகட்டத்தில் பெண்கள் ஏழையாக இருந்தாலும் பணக்காரர்களாக இருந்தாலும் பேச முடியாத மௌனிகளாக இருந்தனர்



என்பது மறுக்க இயலாத உண்மை. பெண்களுக்குக் கல்வியறிவு கிடைக்கவில்லை. ஓரளவு கல்வியறிவு பெற்ற பெண்களும் பட்டம் பெற்ற பெண்களும் தங்களுடைய அறிவைக்கொண்டு எதையும் சாதிக்க இயலவில்லை. ஏழைப் பெண்கள் அன்றாடக் கூலிகளாக இருந்தனர். பணக்காரப் பெண்கள் வீட்டுச் சிறைக்குள் காவல் வைக்கபட்டு வெளியுலக அனுபவம் சிறிதுமின்றி சங்கிலியில் பிணைக்கப்பட்ட விலங்குகளாக மாறிப் போயினர். பழக்கப்படுத்தப்பட்ட மாடுகள் போல பகுத்தறிவு சிறிதும் இன்றி செக்கு மாடுகள் போல வீட்டை சுற்றி சுற்றி வந்தனர். இப்படத்தின் கதையில் பெரும் பணக்காரரின் மகளாக பிறந்து அவரது இளைய தாரத்தின் தம்பிக்கு மனைவியான பண்டரிபாய் தன் தம்பிக்கு எழுத்தறிவு மற்றும் துணிச்சல் வேண்டும் என்ற எண்ணம் கூட இல்லாமல் தன் கணவரின் கட்டளைக்குப் பயந்து பணக்கார இளைஞனை பெரும் சொத்துக்களுக்கு அதிபதியாய்,

தொழிற்சாலை முதலாளியை எண்ணறிவு, எழுத்தறிவு இல்லாத பயந்தாங்கொள்ளியாக, முட்டாளாக வைத்திருப்பார். கணவனின் கட்டளையைச் சிரமேற்கொண்டு நடப்பதே கற்புள்ள பெண்களின் தலையாயக் கடமை என்று காட்டும் வகையில் இவரது கதாபாத்திரம் அமைக்கப்பட்டிருக்கும். அக்கால கட்டத்தில் பெண்களின் நிலை பணக்காரர்களாக இருந்தாலும் இதுபோலத்தான் இருந்தது.

பணக்காரப் பெண்ணின் முடிவெடுக்கும் திடம்

நடுத்தர வயதுப் பெண்களும், வயது முதிர்ந்த பெண்களும் வீட்டு ஆண்களின் சொற்கேட்டு அதன்படி நடப்பதே பெண்களுக்கு அழகு என்று நம்பி வந்த சூழ்நிலையில், படித்த இளம் பெண்கள் தங்களுடைய விருப்பத்திற்கு ஏற்ப முடிவெடுக்கும் இயல்பு பெற்றவர்களாக இருந்தனர் என்பதை உணர்த்த சரோஜாதேவி கதாபாத்திரம் அமைந்துள்ளது. சமூகப் பழக்க வழக்கத்தில் பெண் மாப்பிள்ளை வீட்டுக்கு போய் மாப்பிள்ளையைப் பார்க்கும் புதிய வழக்கம் இப்படத்தில் காட்டப்படுகிறது.

ராமுவின் வீட்டுக்குப் போகும் ரங்காராவும் அவரது மகள் சரோஜாதேவியும் ராமு எம்.ஜி.ஆரின் தோற்றத்தையும், அவரது பயந்தாங்கொள்ளி தனத்தையும் கண்டு வெறுத்துப் போய் திரும்பி விடுகின்றனர். தன் அக்காவையும் அக்காள் மகளையும் மட்டுமே கண்டிருந்த ராமு முதன்முதலாக அழகான நவநாகரீகமான ஓர் இளம் பெண்ணை கண்டதும் நாணிக் கோணி நெளிவது படம் பார்ப்பவருக்கு புதுமையாகவும்

வேடிக்கையாகவும் தோன்றும். இக்காட்சியில் எம்.ஜி.ஆர். சிறப்பாக நடித்திருந்ததைப் பார்த்து பலரும் ஆச்சரியப்பட்டனர். பத்திரிகைகளும் பாராட்டின. அதுவரை வந்த எந்தப் படத்திலும் எம்.ஜி.ஆர். இதுபோன்ற பயந்தாங்கொள்ளி பாத்திரத்தில் நடித்ததில்லை. பெயரைச் சொல்லும் போது கூட யார் காதுக்கும் கேட்காத வகையில் ராமு என்று சொல்வார். வாயசைவை வைத்து வார்த்தையைப் புரிந்துகொள்ள வேண்டும். திலிப் குமார் எம்.ஜி.ஆரின் நடிப்பை பார்த்துவிட்டு என்னால் இப்படி நடிக்க இயலாது என்று சொல்லிப் பாராட்டினார்.

பணக்கார இளம்பெண்ணாக தோன்றும் சரோஜாதேவி ராமு உட்கார்ந்ததும் அவரிடம் பாலை எடுத்துக் கொடுத்து அதனைக் குடிக்குமாறு கூறுவார். நம்பியார் ராமுவைப் பார்த்து ஓங்கிய குரலில் அதட்டுவார். பயந்து நடுங்கிய ராமு பதறியதால் கைதவறி பால் சரோஜாதேவியின் மடியில் கொட்டிவிடும். உடனே சரோஜாதேவி கைக்குட்டையால் சேலையைத் துடைத்துக் கொண்டு தந்தையைப் பார்த்து கிளம்புவோம் என்று சொல்லிவிடுவார். வரதட்சணையாக அவர்கள் தர இருந்த ஐம்பதாயிரத்தை கொடுத்து விட்டுப் போகும்படி பணத்தை பெறுவதிலேயே கண்ணும் கருத்துமாக இருப்பார் நம்பியார். ஆனால் சரோஜாதேவி பிறகு பார்த்துக்கொள்ளலாம் என்று சொல்லி தன் தந்தையை அழைத்துச் செல்வார். இக்காட்சியில் படம் எடுத்த காலகட்டத்தை சேர்ந்த படித்த பணக்கார இளம்பெண், வீட்டு ஆண்களை தமது கைப்பாவைகளாக வைத்திருக்கும் நிலையும் புலனாகிறது. ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு

பதம் என்பது போல பண்டரிபாய் சரோஜாதேவி காட்சிகள் இருப்பதை அறியலாம். இப்படத்தில் அப்பாவியாக பண்டரிபாயையும் தன்னுடைய முடிவுகளை தானே எடுக்கும் துணிச்சல் மிக்க பெண்ணாக சரோஜாதேவியையும் இரு துருவங்களாகக் காட்டியிருப்பர். இந்த காட்சியில் ராமுவின் பயமும் சரோஜாதேவியின் துணிச்சலும் முரண்பட்ட உணர்வுகளை சுவைபட காட்டுவதால் ரசிகர்கள் இக்காட்சியை வெகுவாக கைதட்டி ரசித்தனர். அப்பாவியாகத் தோன்றும் எம்.ஜி.ஆரின் முகமும் நடிப்பும் அவர்களை மிகவும் கவர்ந்தது.

படிப்பறிவில்லாத அப்பாவி

ராமு என்ற கதாபாத்திர அமைப்பு புதுமையானதாகத் தோன்றினாலும் இதுபோன்ற அப்பாவியை எவரும் விரும்புவதில்லை. பணக்கார வாலிபர்கள் வெளியுலக அனுபவம் இன்றி பத்தாம் பசலிகளாக வளர்க்கப்பட்டு, சுய புத்தி இல்லாமல்



பிறர் புத்தியைக் கொண்டு பிழைக்கும் சோம்பேறிகளாகவும், சுயசிந்தனை அற்றவர்களாகவும், அடுத்தவரைச் சார்ந்து இருக்கும் முதுகெலும்பு அற்றவர்களாகவும் அக்காலத்தில் சில குடும்பங்களில் இருந்து வந்ததை ராமு கதாபாத்திரம் தெளிவாக உணர்த்தியது. ஒருவருக்குப் பணம் இருந்தால் மட்டும் போதாது பலரும் பயனடையும் வகையில் அப்பணத்தை செலவு செய்யவும் தெரிந்திருக்கவேண்டும். ஹோட்டலுக்குப் போய் இரண்டு இட்லி சாப்பிடும் இவர் அதற்கான தொகையை எண்ணி எடுத்து தரக் கூட தெரியாத அப்பாவியாக இருப்பார். 'எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்' என்றார் வள்ளுவர். ஆக ஒரு மனிதனுக்கு எண் அறிவும், எழுத்தறிவும் இன்றியமையாததாகும். இதனை மனதில் கொண்டே பிற்காலத்தில் 1982இல் எம்.ஜி.ஆர். முதலமைச்சராக இருந்தபோது சத்துணவு திட்டத்தை அறிமுகம் செய்தார்.

படிப்பறிவின் முக்கியத்துவம் உணர்ந்த எம்.ஜி.ஆர்.

சத்துணவுத் திட்டம் குழந்தைகளுக்கு நல்ல ஆரோக்கியமான உணவை அளித்து அதன் மூலம் அவர்கள் கல்வியில் முழுமையாகக் கவனம் செலுத்தி தனது பள்ளிக் கல்வியை நிறைவாகப் பெற வேண்டும் என்பதே எம்.ஜி.ஆரின் எதிர்பார்ப்பாகும். இத்திட்டத்தினால் சவாலை குழந்தைகள் தமிழ்நாட்டில் இல்லை என்ற நிலைமை ஏற்பட்டது. இந்தியாவில் பள்ளிக்கல்வியில் உயர் கல்வியில் தமிழகமே 49% பெற்று முன்னோடி மாநிலமாகத் திகழ்கிறது. இந்தியாவின் தேசியக் கல்விநிலை தகுதி வெறும் 24% மட்டுமே என்பது பரிதாபத்துக்கு

உரியதாகும். எம்.ஜி.ஆரின் சத்துணவு திட்டமும் அரசிடம் போதிய நிதி இல்லை என்பதால் தனியாருக்கு கல்வி நிலையங்கள் திறக்கும் உரிமையை வழங்கி அங்கு சேர்க்கப்படும் மாணவர்களில் கால்வாசி பேருக்கு இத்தனியார் கல்வி நிலையங்களில் இலவசக் கல்வி வழங்க வேண்டும் என்று விதிமுறை வகுத்ததும் இந்தியாவில் தமிழகம் கல்வித்துறையில் தலை நிமிர்ந்து நிற்பதற்கு காரணங்கள் ஆயிற்று. ஆக எம்.ஜி.ஆர். தான் சார்ந்திருந்த திமுகவின் பகுத்தறிவு பிரச்சாரத்தைப் பரப்ப, பகுத்தறிவு இல்லை என்றால் அந்த மனிதனின் நிலை எப்படி இருக்கும் என்பதைக் காட்டும் வகையில் ராமு கதாபாத்திரத்தில் சிறப்பாக உருவாக்கி நடித்திருந்தார்.

பணக்காரர்களின் அதிகார கொடுமை

எங்க வீட்டுப் பிள்ளை படத்தில் நம்பியார் கொடுமைக்காரப் பணக்காரரின் அடையாளமாக காட்டப்படுவார். பணமும் அதிகாரமும் ஒரு நாணயத்தின் இரண்டு பக்கங்கள் போல



இருப்பதனால் எந்நேரமும் கையில் ஒரு சவுக்கை வைத்துக்கொண்டு இருப்பதாகவே காட்சிகள் உள்ளன. தன்னுடைய பணியாளர்களையும் மைத்துனரையும் மனைவியையும் அடித்து நொறுக்கும் அதிகாரம் தனக்கு இருப்பதாக நம்பிக்கொண்டிருந்த பணக்காரர்களின் பிரதிநிதியாக இப்படத்தில் நம்பியாரின் கதாபாத்திரம் அமைந்திருந்தது. நிஜத்தில் உயர்சாதியினர் நில உடைமையாளர் பலர் காங்கிரஸ் கட்சி மற்றும் ஆட்சியில் முக்கியப் பொறுப்புகளில் இருந்தனர். அக்காலகட்டத்தில் வேலைக் இருந்தால்தான் சாப்பாடு என்றிருந்த காலம் என்பதால் ஏழைத் தொழிலாளர்கள் இவர்களை நம்பியே வாழ வேண்டிய சிரமத்தில் இருந்தனர். நிலம் உயர்சாதியினர் இடம் இருந்ததனால் ஒடுக்கப்பட்டோர் நிலமற்ற கூலி விவசாயிகளாக வாழ்ந்தனர். இவர்கள் முதலாளிகள் வழங்கும் தண்டனைக்கும் அடிக்கும் உதைக்கும் பயந்து அவர்கள் நீட்டிய இடத்தில் கையெழுத்திட்டு அவர்கள் சொன்னபடி கேட்டு ஏறத்தாழ அவர்களின் அடிமைகளாகவே வாழ்ந்தனர்.

தொழிற்சாலையில் வேலை செய்து கொண்டிருந்த ஒரு தொழிலாளிக்கு எந்திரத்தில் சிக்கி கை வெட்டுப்பட்ட போது அவரை மருத்துவமனைக்குக் கொண்டு செல்ல வேண்டும் உங்களின் காரைக் கொடுங்கள் என்று தொழிலாளர்கள் வந்து கேட்கின்றனர். அப்போது நம்பியார் அதற்கு ஈவிரக்கமற்ற பதிலை தருகின்றார் வெட்டுப்பட்டவனை வண்டியில் ஏற்றினால் தனது காரில் ரத்தக்கறை படிந்து விடும். பல ஆயிரம் ரூபாய் மதிப்புடைய காரில் கறை படிவதை அவர் மனம் ஏற்கவில்லை, என்பார். இவ்வாறான இரக்கமற்ற



பதில்களை சொல்கின்ற பெரிய மனிதர்கள் இருந்தனர். இவர்களை எதிர்த்துப் பேசக்கூட திராணியற்றவர்களாகவே அன்றைய காலகட்டத்தில் ஏழைத் தொழிலாளர்களின் நிலை அமைந்தது. நான் ஆணையிட்டால் பாட்டில்


நான் ஆணையிட்டால் அது நடந்து விட்டால்
இங்கு ஏழைகள் வேதனைப் பட மாட்டார்
உயிர் உள்ளவரை ஒரு துன்பமில்லை
அவர் கண்ணீர்க் கடலிலே விழமாட்டார்

என்ற வரிகள் தொழிலாளர்களின் கண்ணீரைத் துடைத்தன. 1972 இல் அதிமுக கட்சி தொடங்கப்பட்டதும் அந்தக் கைகள் எம்.ஜி.ஆரின் கைகளாக இருந்தன.

காங்கிரசின் பிரதிநிதி

எங்க வீட்டு பிள்ளை படத்தில் அதிகார போதை மிக்க பணக்காரராக வரும் நம்பியார் அன்று காங்கிரசின்

பிரதிநிதியாக ரசிகர்களுக்குத் தோன்றினார். தம் கஷ்டங்கள் தெரியாத அவற்றைப் புரிந்துகொள்ள விரும்பாத ஓர் ஆதிக்க வர்க்கத்தின் பிரதிநிதியாக தொழிலாளர்களுக்கும் பணியாளர்களுக்கும் தோன்றினார். அவர்களை பார்த்து யாரும் கேள்வி கேட்க முடியாத நிலையில் அடங்கி ஒடுங்கி வாழ்ந்த போது 'ஒரு தவறு செய்தால் அதை தெரிந்து செய்தால் அவன் தேவன் என்றாலும் விட மாட்டேன்' என்று எம்.ஜி.ஆர். பாடியதும் அதற்கு முன்பு சவுக்கால் நம்பியாரை நாற்பது அடி அடித்ததும் ஏழை எளிய மக்களுக்கு காங்கிரசின் ஏதேச்சாதிகாரத்துக்கு தாங்களே சவுக்கடி கொடுத்தது போல இருந்தது. அப்போதிருந்த அமைச்சர்களும் அரிசிப்பஞ்சம் குறித்து கேள்வி கேட்ட போது திமிராக பதில் அளித்தனர். இதுவும் ஏழை மக்களுக்கு பெரும் அவமானத்தை ஏற்படுத்தியது. தங்களின் வறுமை புரிந்து கொள்ளப்படவில்லையே இனி இவர்கள் என்ன நிரந்தரத் தீர்வு காணப் போகிறார்கள் என்ற ஐயம் தோன்றியது. நம்பியாரின்



நடவடிக்கைகள் ரசிகர்களுக்கு அதிகார வெறி காங்கிரஸ் பிரமுகர் ஒருவரை நேரில் பார்ப்பதாகத் தோன்றியது. இந்த நிலை மார வேண்டும் என்றால் எம்.ஜி.ஆரை ஆதரிக்க வேண்டும் என்ற மனநிலைக்கு மக்கள் வந்தனர். அந்த மனமாற்றத்துக்கு இப்படம் பேருதவி புரிந்தது.

நிறைவு

எம்.ஜி.ஆர். படங்களில் பகுத்தறிவு, திறமைக்கேற்ற வேலை, வேலைக்கேற்ற கூலி என்பதை வலியுறுத்தும் காட்சிகள் இடம்பெற்றன. தொழிலாளர் பிரச்னை பற்றி விவாதிக்கும் காட்சிகளில் கம்யுனிசக் கருத்துக்களும் இடம்பெற்றன. 'இருப்பதை எல்லாம் பொதுவில் வைத்தாலே எடுப்பவர் யாருமில்லை'. 'குவிய குவிய விளைவேதேல்லாம் கூறு போடனும் என்ற பாட்டு வரிகள் பொதுவுடைமை சித்தாந்தத்தையும் சேர்த்துப் பரப்பின. எனவே இவர் படங்களில் திமுகவின் பகுத்தறிவுப் பிரச்சாரம், பார்ப்பனீய எதிர்ப்பு, சாதி பேதம் போன்றவை மட்டும் அல்லாது ஏழை பணக்காரன் என்ற வர்க்க பேதம் முதலாளி தொழிலாளி என்ற வேறுபாடு போன்ற பொதுவுடமைச் சித்தாந்தங்களும் முன் வைக்கப்பட்டன. இவ்விரு அரசியல் கட்சியின் பிரச்சாரங்களும் அவர் படத்தில் இடம்பெற்றன. அந்தக் காலகட்டத்தில் கம்யுனிஸ்ட்கள் எம்.ஜி.ஆரைத் தொடர்ந்து விமர்சித்து வந்தாலும் அவர் தனிக்கட்சி தொடங்கிய பின்பு அவருக்கு முதல் ஆதரவை நல்கியவை கம்யுனிஸ்ட் கட்சிகளே ஆகும். அதன் பிறகு காங்கிரசில் இருந்த தலித்கள் அதிமுகவில் சேர்ந்தனர் கம்யுனிஸ்ட் கட்சிகளும் தமது ஆதரவை அளித்தன.



3. சமூகப் பிரதிபலிப்பு

எங்க வீட்டுப் பிள்ளை படத்தில் இரண்டு வேடங்களில் நடித்த எம்.ஜி.ஆர். அவருடைய வாழ்க்கைப் பின்னணி இரண்டு வேறுபட்ட இடங்களில் காட்டப்பட்டுள்ளது. ராமு எம்.ஜி.ஆர். பணக்கார தொழிலதிபர் வீட்டைச் சேர்ந்தவர். இளங்கோ எம்.ஜி.ஆர். விவசாயக் குடும்பத்தில் இருக்கிறார். ராமுவுக்கு அம்மா அப்பா கிடையாது. சின்னம்மாவும், அக்காவும், மாமாவும் உண்டு. இளங்கோவுக்கு அம்மா மட்டுமே உண்டு. அவரும் பெற்ற அன்னை இல்லை; வளர்த்த தாய் என்பது கதையின் முடிவில் தெரிகின்றது. இரு வேறுபட்ட குடும்பச் சூழ்நிலையில் இருந்துவரும் இரண்டு இளைஞர்களைப் பற்றிய கதையாக அமைந்துள்ளது. இவர்கள் இடம் மாறும்போது அவர்களின் வாழ்க்கையில் ஏற்படும் மாற்றங்களும் அதனால் அந்தந்த இடங்களில் ஏற்படும் மாற்றங்களும் கதைப்பின்னலாக அமைந்து ரசிகர்களைக் கவர்கின்றது.

ராமு சாந்தா காதல்

ராமு தன் மாமாவின் சவுக்கடிக்கு பயந்து இரவில் வீட்டை விட்டு வெளியேறி ஹோட்டலில்

இரண்டு இட்லி சாப்பிட்டுவிட்டு அதற்கு அதிக பணத்தை கொடுத்துவிட்டு, நடந்து வரும்போது பசி மயக்கத்தில் மயங்கி ஓரிடத்தில் விழுந்து விடுகிறார். அப்போது அங்கு வந்த சாந்தா என்ற கிராமத்துப் பெண் வயலில் வேலை செய்பவர்களை அழைத்து எம்.ஜி.ஆரின் மயக்கத்தைத் தெளிவிக்கிறாள். அவர்களில் ஒருவர் ராமுவை இளங்கோ என்று சொல்லவும் இளங்கோவின் வீட்டில் கொண்டுபோய் ராமுவச் சேர்க்கின்றனர். இளங்கோவின் தாயார் காட்டும் அன்பில் மனமுருகி ராமு எம்.ஜி.ஆர். அங்கேயே தங்கி விடுகிறார். சாந்தாவும் அவருக்கு வயல் வேலைகளைக் கற்றுத் தருகிறாள். எழுதப் படிக்கவும் கற்றுத் தருகிறாள். இவ்வகையில் இவர்களுக்கு இடையிலான நெருக்கம் காதலாக மலர்கிறது. இச்சூழ்நிலையில் மீண்டும் இருவரும் இடம் மாறுகின்றனர். அப்போது அவர்கள் தங்களுடைய பழைய இடத்திற்கு வந்து விட்டாலும் சுற்றியிருப்பவர்கள் உணரவில்லை. இதனால் ஏற்படும் குழப்பம் கிளைமாக்ஸ் காட்சியாக அமைந்தது. பின்பு சுபமாக படம் முடிவடைகிறது.

இளங்கோ லீலா காதல்

ராமு எம்.ஜி.ஆர். என்ற அப்பாவியை மாப்பிள்ளை பார்த்துவிட்டு போன சரோஜாதேவி ராமுவின் வீட்டுக்கு இடம் மாறி வந்து விட்ட இளங்கோவை காதலிக்கிறார். இருவருக்கும் நிச்சயம் செய்துவிடலாம் என்று பேசும்போது நிச்சயதார்த்தத்துக்கு இளங்கோ ஒப்புக் கொள்ளவில்லை. இளங்கோவுக்கு அந்த வீட்டுக்குரிய ராமுவைக் கண்டுபிடித்து வீட்டில்



கொண்டு வந்து சேர்க்க வேண்டிய கடமை இருப்பதனால் அவசரப்பட்டு லீலாவுக்கு தாலிகட்ட அவர் விரும்பவில்லை. இளங்கோவைத் தனிமையில் சந்தித்துப் பேசும்போது அவர் தன்னுடைய நிலைமையை மறைமுகமாக எடுத்துரைக்கிறார். அப்போது, நான் ஒரு சாதாரண ஏழையாக இருந்தாலும் நீ என்னை திருமணம் செய்து கொள்வாயா என்று கேட்கிறார். சரோஜாதேவியும் ஒப்புக்கொள்கிறார். அவருடைய காதலை உறுதிப்படுத்திக் கொண்ட இளங்கோ சிறிது காலம் பொறுத்திருக்க வேண்டும் என்று சொல்லிவிட்டு தன்னுடைய கடமையை செய்வதில் நாட்டம் கொள்கிறார்.

ராமு வீட்டு குழப்பத்தை தீர்த்த இளங்கோ

ராமுவின் வீட்டிற்கு வந்து விட்ட இளங்கோவுக்கு அங்குள்ள சூழல் அடுத்தடுத்த

கதாபாத்திரங்களின் உரையாடல் மூலம் உணர்த்தப்படுகிறது.

பண்டரிபாய் *: ராமு வா இப்படி, பாருடா நீ போனதிலிருந்து சோறு தண்ணீர் கூட இல்ல. அழுது அழுது உடம்பு அணலா கொதிக்குது. தூக்கத்துல கூட மாமா, மாமான்னு பொளம்புறா. 'அம்மா மாமா மறுபடியும் கிணத்துல போய் விழுந்திருக்கும் போய் எல்லா கிணத்தையும் பாருமான்னு' அது அழுகிறதும் கெஞ்சுறதும் அப்பப்பா! தம்பி எந்த துன்பத்ததான் நான் தாங்குவேன். மீனா, மீனா அதோ பார் மாமா வந்திருக்கிறத கண்ணு முழுச்சி பாரும்மா மாமாவை பாரு!*

பேபி ஷகிலா *: மாமா ... மாமா..., மாமா ... மாமா அப்பா அடிப்பாங்கனுதான என்னை விட்டுட்டு போன? ஏன் மாமா அம்மாவா உன்னை போகச்சொன்னாங்க? பாவம் உன்னால அடி வாங்குனத பாரு, உடம்பெல்லாம் காயம்.*

பண்டரி பாய் *: மீனா சும்மா இரும்மா. யாரை நொந்து என்ன பிரயோஜனம். நான் வந்த வழி அப்படி.*

எம்.ஜி.ஆர். : *மீனா உங்கம்மா பெண்களின் தெய்வம். கணக்கில்லாத சொத்து சுகமெல்லாம் இருந்தும் நீங்க சந்தோசமா வாழ முடியல. ஏறுக்குமாறா ஒரு ஆம்பள வீட்ல. ஹ்ம் எத்தனையோ இயற்கை கோளாறுல இப்படி ஒண்ணு.*

பண்டரி பாய் : *யாரையும் ஒண்ணும் சொல்லாதப்பா. ஆனா நான் சாகுற வரையிலும் நீ மட்டும் இந்த வீட்டை விட்டு போயிடாத.*

பேபி ஷகிலா : *போக மாட்டேன்னு சொல்லு மாமா.*

பண்டரிபாய் : *போகமாட்டேன்னு சொல்லு தம்பி.*

பேபி ஷகிலா : *சொல்லு மாமா...*

பண்டரிபாய் : *சொல்லுப்பா.... சொல்லமாட்ட*

பேபி ஷகிலா : *சொல்லு மாமா... சொல்லு மாமா...*

பண்டரிபாய் : *சொல்லமாட்ட.... சொல்லமாட்ட*

எம்.ஜி.ஆர். : *போகமாட்டேங்கா. வாழ்வோ, சாவோ இனி உங்களோடயே இருப்பேன். உங்களை சந்தோசமாக வாழ வைப்பது என் பொறுப்பு.*

பேபி ஷகிலா : *நல்ல மாமா...*

பண்டரிபாய் : *தம்பி!!!*

அங்கிருந்த அப்பாவி ராமும் வீட்டைவிட்டுச் சென்றுவிட்டதால், அவரிடம் இருந்த சொத்துக்களை அபகரிக்க ராமுவிடம் கையெழுத்து வாங்க முடியாததால் ஆத்திரம் கொண்ட நம்பியார் தன்



மனைவி சரியாக கவனிக்காமல் ராமுவைத் தப்பியோட விட்டாள் என்று மனைவியை அடித்துத் தண்டித்தார். பணத்தாசை கொண்ட சின்னம்மாவும், தம்பி நம்பியாரும் ஒரு பக்கம் இருக்க, அதே வீட்டில் அப்பாவியும், கணவனே கண் கண்ட தெய்வம் என்று கருதி வாழும் நம்பியாரின் மனைவி பண்டரிபாய், அவரது மகள் கள்ளம் கபடம் அறியாத ஐந்து வயது சிறுமி மீனாவும் வாழ்வதைத் தெரிந்துகொண்ட இளங்கோ, எத்தனையோ இயற்கைக் கோளாறுகளில் இதுவும் ஒன்று என்ற முடிவுக்கு வருகின்றார்.

பண்டரிபாய் படும் துயரத்தைப் பார்த்து இது விதியின் கொடுமை, பூர்வ ஜென்மத்து பாவத்தின் விளைவு, தலையெழுத்து என்று வழக்கமான காரணங்கள் கூறாமல் திமுகவைச் சார்ந்தவர் என்பதால் இயற்கையின் கோளாறு என்ற காரணத்தை எடுத்துக் கூறுகின்றார். பின்பு அதை சரி செய்துவிடலாம் என்ற நம்பிக்கையை விதைக்கிறார். விதி என்று கூறி விட்டால் அதனை அனுபவித்து தான் ஆக வேண்டும் யாராலும் விதியை மாற்ற இயலாது என்ற அவநம்பிக்கை வந்துவிடும் எம்.ஜி.ஆர். தனது படங்களில் கஷ்டம் தீரும், நன்மை நடக்கும் என்ற நம்பிக்கையை அளிப்பார். அதனால் அவர் ஏழைகளின் நம்பிக்கை நட்சத்திரம் ஆனார்.

கணக்குப்பிள்ளை

நகரத்திலும் கிராமத்திலும் பணக்கார வீடுகளில் சொத்துக்களைப் பராமரிக்க ஒரு கணக்குப்பிள்ளை இருப்பது வழக்கம். ஜனநாயகக் குடியரசில் அமைச்சர்களிடம் இருக்கும் தனி அதிகாரிகளும் அந்தக் காலத்துக் கணக்கு பிள்ளைகளுடன் ஒப்பிடத் தக்கவர்கள் ஆவர். இவர்கள் 'ஆமாம் சாமி'களாக

இருப்பார்கள். இவர்கள் பிள்ளை பூச்சிகள் என்று கருதப்பட்டாலும் சிலர் ‘போட்டுக்கொடுத்து காரியம் சாதிக்கும் வல்லமை’ பெற்றிருப்பர். சிலர் தமக்கு வேண்டிய சில சலுகைகளை மறைமுகமாக பெற்றுக்கொள்வர். சில அப்பாவிகள் எது சொன்னாலும் சரியென்று தலையாட்டும் ‘தஞ்சாவூர் தலையாட்டி பொம்மை’களாக இருந்து வாழ்க்கையைக் கழித்துவிடுவர். இத்தகையோரின் பிரதிநிதியாக இப்படத்தில் கே ஏ தங்கவேலு நடித்தார். இவர் பணத்தாசை பிடித்தவர். யாரும் இல்லாத நேரத்தில் தான் ஒளித்து வைத்திருக்கும் பணத்தை எடுத்து தன் தலை மீது போட்டு அபிஷேகம் செய்து அகமகிழ்ந்து போவார். முதலாளி எழுதும் தப்புக் கணக்குடன் தானும் கொஞ்சம் பணத்தை கையாடல் செய்துவிட்டு அதையும் கம்பெனி கணக்கில் எழுதிவிடுவார். எம்.ஜி.ஆர். நாகேஷிடம் மேனேஜர் பொறுப்பை ஒப்படைக்கும் காட்சியில் இவரும் பணம் சுருட்டி இருப்பது தெரிய வரும்.

நம்பியாரின் தொழிற்சாலையின் மேனேஜர் என்ற பெயரில் தங்கவேலு இருக்கின்றார். இவர் வீட்டிலும் இருப்பார் தொழிற்சாலையிலும் இருப்பார். நம்பியார் செல்லுமிடங்களில் எல்லாம் அவர் கூடவே செல்வார். ஏறத்தாழ அவருக்கு ஒரு அந்தரங்கச் செயலாளர் போல செயல்படுகிறார். நம்பியார் சொல்லுவதை கேட்டு பொய் கணக்குகளையும் எழுதுவார். ஏனென்றால் இவரால் நம்பியாரை எதிர்த்துப் பேச இயலாது. சரியோ தவறோ நம்பியார் சொல்படி நடப்பதுதான் இவருடைய பணி. எம்.ஜி.ஆர். பொறுப்பேற்றதும் இவரிடம் கணக்கு கேட்கும் பொழுது இவர்

சின்னம்மாவுக்கு அட்டிகை வாங்கியது, மாமா கிளப்புக்கு எடுத்துச் சென்றது என்று கணக்கு கூறும்போது ராமு எம்.ஜி.ஆருக்கு சொந்தமான சொத்தை நம்பியார் முறைகேடாக செலவு செய்து அழித்ததை அறிந்துகொள்வார்.

எம்.ஜி.ஆர் : *மிஸ்டர் மலையப்பா கணக்கெல்லாம் இங்க தான இருக்கு எடுத்துட்டு உள்ளே வாங்க. (தொழிலாளிகளை பார்த்து) உங்களுக்கெல்லாம் என்ன வேணும்?*

தொழிலாளி : *ஒரு முக்கியமான விசயமா உங்கள பார்க்க வந்தோம்*

எம்.ஜி.ஆர். : *உள்ள வாங்க . . .*

தங்கவேலு : *ஆண்டவனே இவ்வளவு நாளா கணக்கே கேட்டதில்லையே. என்ன காரணமோ தெரியலையே திடீர்னு கணக்கு கேட்க ஆரம்பிச்சிருக்காரு. முருகா! என்ன பெத்தவனே! அய்யா திடீர்னு கணக்கு கேட்டா!!?*

நாகேஷ் : *மாமா என்ன பால் கணக்கா?*

தங்கவேலு : *பாதாம்கீர் கணக்கு அடே அப்பா பேச்சழகா இங்க எங்கடா வந்த?*

நாகேஷ் : *நீ கௌரிட்டு இருக்கியே குப்ப அதுல ஏதாவது கௌம்புதான்னு பார்க்கலாம்னு வந்தேன்.*

தங்கவேலு : *ம்ம் வரப்போகுது பாரு பேய், பிசாசு, காட்டேரி, சைத்தான்*

நாகேஷ் : *மணி அடிச்சாச்சு ஓடு . . . நான் பொறுக்கிட்டு வாரேன்*

எம்.ஜி.ஆர். : *ஆமா இதயெல்லாம் ஏன் முன்னாடியே சொல்லிருக்கக்கூடாது நீங்க.*

தொழிலாளி : *எத்தனையோ முறை சொன்னோம், கவனிக்கவேயில்லீங்க.*

எம்.ஜி.ஆர். : *ஏன் மிஸ்டர் மலையப்பன் இவங்க குறைகளையெல்லாம் ஏன் கவனிக்கல?*

தங்கவேலு : *அய்யயோ அய்யயோ கவனிக்லையா? உங்க மாமா இரண்டு கையால வாரி வாரி கொடுத்திருக்காரு. அது என்னவோ தெரியலிங்க இந்த வர்க்கத்துக்கு ஒரு பெரிய சாபக்கேடாவே ஆகிப்போச்சு, என்ன கொடுத்தாலும் பத்தல, போதல, பத்தல, போதல.*

நாகேஷ் : *கொடுத்தீரா? எடுத்தீரா?*

தங்கவேலு : *டேய் டேய் வேணாண்டா வேணாண்டா நாக்கு அழுகி கீழ விழுந்துரும்.*

எம்.ஜி.ஆர். : *உங்க கோரிக்கைப்படி போனஸ், சம்பள*



உயர்வு எல்லாம் உடனடியாக கவனிக்கப்படும் நீங்க போகலாம். வணக்கம்.

தொழிலார்கள் : வணக்கம் !!

நாகேஷ் : இந்த புஸ்தகம் புதுசா இருக்கு, விவரிச்சு எழுதுன கணக்கு போலிருக்கு தேடிப்பாருங்க தேடிப்பாருங்க கிடைக்கும்.

எம்.ஜி.ஆர். : மிஸ்டர் மலையப்பன் ஒரே தேதியில 7,000; 3,500; 1000; 850; 500 செலவு எழுதியிருக்கீங்களே என்ன காரணம்?

தங்கவேலு : ஆ ஆ அப்படி கேளுங்க இதை நான் உங்ககிட்ட சொல்லனும்னு நெனச்சேன், சந்தர்ப்பம் வாய்க்கல. அப்படியெல்லாம் அடிக்கடி கணக்கு கேட்டீங்கன்னா ஒரு தப்புத்தண்டா வர்ரதுக்கு நியாயமே இல்லன்னு நெனக்கிறவன். நான். ம்... ம் ... 7,000 தானுங்களே மாமா க்ளப்புக்கு எடுத்துட்டு போனது.

எம்.ஜி.ஆர். : கம்பெனிக்காரியமாவா?

தங்கவேலு : ஹ்ஹ அது எனக்கு தெரியாது.

எம்.ஜி.ஆர்.: 3,500?

தங்கவேலு : 3,500 பெரியம்மாவுக்கு அட்டிகை வாங்குனது.

எம்.ஜி.ஆர்.: அதுவும் கம்பெனி காரியம்தான?

தங்கவேலு : ம்... ம்.. கழுத்துக்கு அட்டிகை . . . .

எம்.ஜி.ஆர். : 1000 ரூபாய்?

தங்கவேலு : ஆயிரம் ரூபாய் வீட்டு செலவுக்காக எடுத்தது.

நாகேஷ் : *களவு ஆயிரம் ரூபாய்? ச்சே செலவு ஆயிரம் ரூபாய்?*

தங்கவேலு : *ஆமா . .*

எம்.ஜி.ஆர். : *850...?*

தங்கவேலு : *சின்னம்மாவுக்கு வளையலுக்கு அட்வான்ஸ் கொடுத்தது.*

எம்.ஜி.ஆர். : *500 . . .?*

தங்கவேலு : *ஐ ... ஐ ... ஐநூறு . . . ஐநூறு வந்து என்றவாறே காதை சொரிவார்.*

நாகேஷ் : *காதுக்கு தோடு வாங்குனதா?*

எம்.ஜி.ஆர். : *மிஸ்டர் மலையப்பன் கம்பெனி பணத்தை அநாவசியமா செலவு பண்ண நீங்க உடந்தையா இருந்திருக்கீங்க . . .*

தங்கவேலு : *இல்ல தம்பி ... அதெல்லாம் கிடையாது..*

எம்.ஜி.ஆர். : *உங்க அனுமதியிலதான பணம் கொடுக்கப்பட்டிருக்கு?*

தங்கவேலு : *ஹி ...ஹி ஆமா தம்பி . . .*

எம்.ஜி.ஆர். : *அதனால உங்கள சஸ்பென்ஸ் பண்றேன்.*

தங்கவேலு : *ஹ்ஹாஹா !!!!!!!!!!!!*

எம்.ஜி.ஆர். : *கோவிந்தன் நீ ஜார்ஜ் எடுத்துக்க. பணம் விசயம் எச்சரிக்கையாக இருக்கனும். இவரை என்னன்னு கவனி.*

நாகேஷ் : *மாமா . . . மாமா ஐயய்யோ !! (என்றவாறே போன் செய்து) ஹலோ யாரு கால்நடை*

ஆஸ்பத்திரியா? வாங்க . . . சீக்கிரம் வாங்க . . . எங்க மாமாவுக்கு உடம்பு சரியில்ல க்விக்லி.

படம் வெளிவந்த காலகட்டத்தில் பணக்காரர்களின் கூடவே இருக்கும் கணக்கப்பிள்ளை அல்லது மேனேஜர் மிகுந்த செல்வாக்கு படைத்தவராக குடும்பத்தின் முடிவுகளில் தலையிடுபவராகக் கூட இருப்பதுண்டு. இந்தப் பதவி சுகம் கண்டவர்கள் தன்மானத்திற்காக பதவியை இழப்பது கிடையாது. மாறாக தன்மானத்தை இழந்தும் பதவியை இறுகப்பிடித்துக் கொண்டிருப்பர்.

சிலர் ஆசைக்கும் தேவைக்கும்
வாழ்வுக்கும் வசதிக்கும்
ஊரார் கால் பிடிப்பார்
அதில் மானமில்லை ஈனமில்லை
அவர் எப்போதும் வால் பிடிப்பார்

என்று எம்ஜி ஆர் பாடு வரிகள் கணக்குப்பிள்ளை அல்லது மேனேஜர் இயல்பை பற்றி விமர்சித்துப் பாடுவதாகும்.

எங்க வீட்டுப் பிள்ளை படத்தில் பதவிப் பித்து பிடித்த தங்கவேலு தனது வீடு மேனேஜர் வீடாகவே அடையாளம் காணப்பட வேண்டும் என்ற எண்ணத்தில் முன்பு வெறுத்த நாகேஷுக்கு அவர் மேனேஜரானதை அறிந்ததும் மனமுவந்து தனது பெண்ணைத் திருமணம் செய்து தர சம்மதிப்பார். ஆக இந்தத் திருமணம் நாகேஷுக்காக அல்ல அவரது பதவிக்காக என்பதை இப் படம் தெளிவாக உணர்த்தும். இவர் பணத்தாசையும் பதவி ஆசையும்

கொண்ட நடுத்தர வகுப்பு பிரதிநிதியாக இடம்பெற்றுள்ளார்.

ஏழைக் காதலியும் பணக்கார காதலியும்

கிராமத்துப் பெண்ணாக வரும் சாந்தா [ரத்னா] இயற்கையோடு இயைந்த விவசாயின் வாழ்க்கையில் எவ்விதத் துன்பமும் இல்லை; கிராமத்து வாழ்க்கை மகிழ்ச்சி நிரம்பியது என்பதை எம்.ஜி.ஆருக்கு எடுத்துச்சொல்லி அவரை கிராமத்தானாகவே மாற்றிவிடும் பெண்ணாக நடிக்கிறார். பணக்கார சரோஜாதேவிக்கு நேர்மாறாக அன்பும் அடக்கமும் உள்ள பெண்ணாக வருகிறார். சரோஜாதேவி பட்டணத்தைச் சேர்ந்த படித்த பெண்ணாக இருந்தாலும் இரக்க சிந்தை உள்ளவர் என்பதை கடைக்கு வரும்போது அவரைச் சுற்றி வரும் பிச்சைக்காரர்களுக்கு தர்மம் கொடுக்கும் காட்சி உறுதி செய்கிறது. துணிச்சலாக தன் மனதில் தோன்றிய கருத்துக்களை ஒளிவுமறைவின்றி பேசும்



பெண்ணாக இருந்தாலும் காதலிக்கும் போது ஏழை பணக்காரன் என்ற வித்தியாசமின்றி இளங்கோவை அவருடைய பண்புகளுக்காக நேசிக்கின்றார். துடுக்கான பேச்சும் மிடுக்கான நடையும் கொண்ட இவர் குழந்தை உள்ளம் படைத்தவர் தன்னுடைய காதல் தோல்வி அடைந்து விட்டது என்பதை உணர்ந்ததும் சாகவும் துணிகிறார். தன்னைத் தவிர வேறு எந்த உறவும் இல்லாத அப்பாவை நினைத்து மனதைத் தேற்றிக் கொள்கிறார். ரத்னாவிடம் இவர் பொறுமையாக எம்.ஜி.ஆர். பற்றி விசாரிக்கிறார். ரத்னாவும் நிதானமாக பதில் அளித்து விட்டு செல்கிறார். படம் பார்ப்பவருக்கு அந்தக்காட்சி பதட்டத்தை ஏற்படுத்தினாலும் வெகு நிதானமாக எவ்வித படபடப்பும் துடிதுடிப்பும் இன்றி எடுக்கப்பட்டுள்ளது.

அப்பாவி இளைஞர்கள் தாம் இளங்கோவைப் போல ஆகவேண்டும் என்று விரும்பினர். கிராமத்துப் பெண்கள் தங்களுக்குப் பணக்கார ராமு போலொரு கணவன் அமைய வேண்டுமென்று ஆசைப்பட்டு இப்படத்தைப் பார்த்தனர். வீட்டுக்குள் அடிபட்டு உதைபட்டு கிடக்கும் பெண்கள் தங்களை அந்தக் கொடுமையிலிருந்து மீட்க இளங்கோவைப் போல ஒரு அன்புத் தம்பி [ரட்சகர்] வரமாட்டாரா என ஏங்கிய படி இப்படத்தை ரசித்தனர். நம்பியார் போன்ற முதலாளியிடம் சிக்கித்தவிக்கும் தொழிலாளிகள் எம்.ஜி.ஆர். போன்ற ஒரு முதலாளி தங்களுக்கு வருவார் என்ற நம்பிக்கையோடு பார்த்தனர். இவர்கள் அனைவருக்கும் அவர்களின் ஆசைகள் நிறைவேறும் காலம் விரைவில் வரும் என்ற நம்பிக்கையை இப்படம் அளித்தது.

குழந்தை நலம்

எம்.ஜி.ஆர். தம் படங்களில் சிறுவருக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்திருப்பார். தந்து பாடல்களை, குறிப்பாக் பல்லவியை இரண்டு வயது குழந்தை பாட வேண்டும் என்று பாடலாசிரியரிடம் சொல்லி எழுதி வாங்குவார். சித்தி படத்தில் வரும் சிறுவர்கள் எங்க வீட்டு பிள்ளையின் 'நான் ஆணையிட்டால்' பாடலைப் பாடுகின்ற காட்சி இடம்பெற்றது. இது அன்று பலரது வீடுகளில் காணப்பட்ட சராசரி நிகழ்வு. சிறுவர்கள் எம்.ஜி.ஆரை ரசித்து ரசிகர்கள் ஆகினர். இவர்களே இன்று அறுபது எழுபது வயதினராக வாழ்ந்து எம்.ஜி.ஆர். பட விழா நிகழ்ச்சிகளை நடத்தி வருகின்றனர். பெண் குழந்தைகள் எம்.ஜி.ஆரின் நான் ஏன் பிறந்தேன், அடிமைப் பெண், எங்க வீட்டுப் பிள்ளை போன்ற படங்களில் கதையோடு சேர்ந்து இடம் பெற்றதால் சிறுமிகளும் எம்.ஜி.ஆரின் ரசிகைகளாக வளர்ந்து வந்தனர். தெலுங்கு படத்தில் பையன் நடித்திருக்க எம்.ஜி.ஆர். தமிழில் அதை சிறுமியாக மாற்றி ரசிகர்களைக் கவர்ந்தார். சிறுமி துடுக்காக பேசும்போது பெண்ணுரிமை குரலும் படத்தில் ஓங்கி ஒலிக்கிறது. எதையும் பிரச்சாரமாக செய்யாமல் அன்றாட வாழ்வில் நடந்து காட்டி, படங்களில் செய்து காட்டி இலட்சியப்படி ல் வாழ்ந்து காட்டி வழிகாட்டியவராக எம்.ஜி.ஆர். விளங்கினார்.

காங்கிரஸின் ஆட்சி முடிந்து திமுகவின் ஆட்சி மலர்ந்தால் மக்களின் துன்பம் துயரம் வேதனைகள் தீர்ந்து மகிழ்ச்சியான வளர்ச்சி நிரம்பிய ஒளி பொருந்திய எதிர்காலம் தோன்றும் என்ற நம்பிக்கை இப்படத்தைப் பார்த்த பின்பு ஒவ்வொரு

தரப்பினருக்கும் தோன்றியதால் சமூகத்தின் அனைத்துத் தரப்பினரும் இப்படத்தை திரும்பத் திரும்ப பார்த்தனர். இதனால் இப்படம் 250 நாட்கள் ஓடி வெள்ளிவிழா படமாகத் திகழ்ந்தது. சுமார் எட்டு மாதங்கள் படம் ஒரே திரையரங்கில் அரங்கு நிறைந்த காட்சிகளாக ஓடியது. இப்படம் அனைத்து தரப்பு மக்களையும் கவர்ந்து இழுக்கின்றது என்பதை புரிந்து கொள்ளலாம்.

நிறைவு

எங்க வீட்டு பிள்ளை படத்தின் கதாபாத்திரங்கள் ஒவ்வொருவரும் அன்றாட வாழ்வில் சமுதாயத்தில் உள்ள தினந்தோறும் சந்திக்கின்ற கதாபாத்திரங்களின் பிரதிநிதிகளாக இடம்பெற்றனர். எனவே படம் பார்ப்பவ ர்கள் யாராவது ஒருவரோடு தன்னையும் இணைத்து பார்த்தனர். படம் பார்ப்பவர் கிராமத்துப் பெண்ணாக இருக்கலாம், கிராமத்து இளைஞனாக இருக்கலாம், பணக்காரனாக இருக்கலாம், நடுத்தரக் குடும்பத்தைச் சேர்ந்தவராக இருக்கலாம். ஒரு கதாபாத்திரத்தோடு தன்னை இணைவு படுத்திக்கொள்ள கூடியதாகவே இப்படத்தின் கதாபாத்திரங்கள் அமைக்கப்பட்டன படம் பார்ப்பவர் அனைவரும் இப்படத்தில் தன் மனதைச் செலுத்தி பார்த்ததால் திரும்பத் திரும்ப வந்து இப்படத்தைப் பார்த்தனர்.

4. நான் ஆணையிட்டால் பாடலின் சிறப்பு

இந்திய திரைப்படங்களில் பாடல் காட்சிகள் இடம்பெறுவது ஒரு மரபு. பிற நாட்டில் வெளிவரும் பிறமொழி படங்களில் அதிகளவில் பாடல் காட்சிகள் இடம்பெறுவது கிடையாது. ஒரு முறை 1965இல் இந்தியத் திரையரங்குகளில் செல்வாக்குப் பெற்ற பாடல் எது என்ற ஒரு கணக்கெடுப்பு நடந்தது. அப்போது தமிழ்நாட்டில் எங்க வீட்டுப் பிள்ளை படம் வெளியாகியிருந்தது. எங்க வீட்டுப் பிள்ளை படத்திற்கு வந்து பார்த்த ஆய்வாளர்கள் 'நான் ஆணையிட்டால்' பாட்டுக்கு திரையரங்கு மொத்தமும் கைதட்டி ஆரவாரம் செய்வதைப் பார்த்துவிட்டு, இந்தியத் திரையரங்குகளில் ரசிகர்களிடையே அதிக வரவேற்பு பெற்ற திரைப்பாடல் 'நான் ஆணையிட்டால்' பாடல் தான் என்று முடிவுசெய்தனர்.

'நான் ஆணையிட்டால்' பாடல் முதலில் 'நான் கடவுள் ஆனால்' என்று தொடங்கப்பட்டு எழுதப்பட்டிருந்தது. நான் கடவுள் ஆனால் என்ற வரி தணிக்கையின் போது பிரச்சினைக்கு உள்ளாகும் என்பதால் அது மாற்றப்பட்டது. 'நான் மன்னன் ஆனால்' என்று [If I were a King] இஃப் ஐ வேர் எ கிங்

சினிமா படத் தலைப்பின் தமிழாக்கம் ஆக இருந்தது. எம்.ஜி.ஆர். பாட்டைப் படித்து விட்டு இப்போது 'மன்னராட்சி இல்லையே பிறகு எதற்கு இச்சொல் யாராலும் மன்னனாக முடியாது எனவே இது பொருளற்ற வரி' என்று சொல்லிவிட்டார். பிறகு நான் ஆணையிட்டால், அது நடந்துவிட்டால் எனத் தொடங்கும் இப்பாடல் பல்லவி முடிவானது..

'நான் ஆணையிட்டால்' பாடல் மிகுந்த வரவேற்பைப் பெறுவதற்கு மூன்று காரணங்கள் உண்டு.

1. ஏழை மக்களின் எதிர்பார்ப்பு,

2 அப்பாடலுக்கான எம்.ஜி.ஆரின் நடன அசைவுகளின் விரைவு, கொடுத்த போஸ் மற்றும் சிலம்புச் சண்டையின் அடவுகள் ஆகிய அனைத்தும் சேர்ந்து ஸ்டைலும் சண்டையும் நடனமும் இணைந்த புதிய முறையாக இருந்தது,

3 வில்லன் தவிர வீட்டில் இருக்கும் மற்ற அனைவரும் பாடல் காட்சியில் இடம் பெற்றனர்..

ஆக இது ஒரு கூட்டு நிகழ்வு போல ஒருவர் பாட மற்றவர் அங்கீகரிக்கும் கூட்டுப்பாடல் நிகழ்வாக விளங்கியது.

ஏழைகளின் எதிர்பார்ப்பு

எங்க வீட்டுப் பிள்ளை படத்தில் தன் வீட்டில் பணிபுரியும் பணியாளர்களை சவுக்கால் அடித்துத் தண்டிக்க போகும் நம்பியார் வீசிய சவுக்கை கண்டு அவர்கள் பயந்து நடுங்கி நின்ற வேளையில், ஆதி



மூலமே காப்பாற்று என்று முதலையின் பிடியில் சிக்கிய கஜேந்திரன் அபயக் குரல் கொடுத்தபோது சுதர்சனச் சக்கரத்தை வீசி முதலையின் கழுத்தை அறுத்துக் கொன்று யானையை காப்பாற்றிய திருமாலைப் போல, வீசிய சவுக்கைப் பிடித்து அவர்களைக் காப்பாற்றி மீண்டும் அதனை சொடுக்கி அது,

"நான் ஆணையிட்டால் அது நடந்துவிட்டால்
இங்கு ஏழைகள் வேதனை படமாட்டார்
உயிர் உள்ளவரை ஒரு துன்பமில்லை
அவர் கண்ணீர்க் கடலிலே விழ மாட்டார்"

என்று எம்.ஜி.ஆர். பாடிய போது அங்கிருந்த பணியாளர்களுக்கு எல்லாம் நிம்மதிப் பெருமூச்சு எழுகிறது. படம் பார்ப்பவர்களுக்கு உற்சாகம் தொற்றிக்கொள்கிறது. விசில் பறக்கிறது. நம்பியாரைத் தூண்டிவிட்டு அக்கிரமங்களை செய்ய

வைத்த அவரது அக்காள் எம்.ஜி.ஆரின் கையில் சவுக்கு இருப்பதைப் பார்த்து நடுநடுங்கிப் போவார். தொழிற்சாலையில் மேனேஜராக இருக்கும் தங்கவேலுவிடம் வந்து எம்.ஜி.ஆர். "அவர் உரிமைப் பொருள்களைத் தொடமாட்டேன்" என்று அவரது நெஞ்சைத் தட்டி காட்டி பாடும்போது தங்கவேலு கோட் ஸ்டாண்டில் உட்கார்ந்தபடி ஆடிப் போவார்.

"பொது நீதியிலே புதுப் பாதையிலே வரும்
நல்லோர் முகத்திலே விழிப்பேன்"

என்று எம்.ஜி.ஆர். பாடும்போது படிக்கட்டில் அவரது அக்கா பண்டரிபாய் புன்னகையோடு இறங்கி நடந்து வருவதும் அவரைப் பார்த்து இவ்வரிகளைப் பாடுவதும் படத்துக்கு மிகப்பொருத்தமாக அமைந்திருக்கும். உண்மையில் அவ்வரிகள் அடுத்து வரும் அண்ணாவின் ஆட்சியைக் குறிப்பதாக தொனிக்கும். பொது நீதியிலே புது பாதையிலே வர



இருப்பவர் அறிஞர் அண்ணா என்பதும் உணர்த்தப்பட்டது.

ஒன்றே குலம் ஒருவனே தேவன்

எம்.ஜி.ஆர். திமுக.வில் இருந்த காரணத்தால் ஜாதிமத பேதம் அற்றவராக விளங்கினார். பெரியார் கடவுள் இல்லை என்றார். ஆனால் அறிஞர் அண்ணா ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்றார். அண்ணாவின் வழிவந்த எம்.ஜி.ஆர். இப்பாட்டில் அனைத்து ஜாதி மதத்தை ஒன்றுபடுத்தும் விதத்தில்

> *" ஒரு தலைவன் உண்டு*
> *அவன் கொள்கை உண்டு அதை*
> *எப்போதும் காத்திருப்பேன்"*

என்ற வரிகள் படம் பார்க்கும் மக்களிடையே சாதி மதப் பாகுபாடில்லாமல் ஒற்றுமையை வளர்க்கும் வகையில் அமைந்தது. திராவிட கட்சியின் தலைவரான பெரியார் கடவுள் இல்லை என்று சொல்லி பிள்ளையார் சிலையை உடைத்தார். ஆனால் பெரியாரின் சீடரும் திமுகவின் தலைவருமான அறிஞர் அண்ணா நாங்கள் பிள்ளையாரையும் உடைக்க மாட்டோம்; பிள்ளையாருக்குத் தேங்காயும் உடைக்க மாட்டோம் என்றார். அடிக்க அடிக்க அம்மியும் நகரும் என்பது போல ஒரு நல்ல கருத்தை திரும்பத் திரும்பச் சொல்லும் போது தவறுகள் திருத்தப்படுவது இயற்கை. எனவே எம்.ஜி.ஆர். தனது படங்களில் வாழ்வியல் நெறிகளை, நல்ல கருத்துக்களை திரும்பத் திரும்பப் பாடல்களிலும், வசனங்களிலும், காட்சிகளிலும் வலியுறுத்தினார்.

கிறிஸ்துவ ரசிகர்களின் ஆதரவு

எம்.ஜி.ஆர். தனது படங்களில் இயேசு கிறிஸ்துவை சிறந்த மனிதராக போற்றி முக்கிய காட்சிகளில் அவர் படத்தை இடம் பெறச் செய்வார். பாடல்களில் அவர் பெயர் இடம்பெறும்படி செய்வார். இயேசு கிறிஸ்துவும் சினிமாவில் வரும் எம்.ஜி.ஆரும் மனித சமுதாயத்தில் தவறு செய்பவர்களை தண்டித்து மன்னிக்கும் இயல்புடையவராக இருந்தனர். இயேசு கிறிஸ்துவும் எருசலேம் ஆலயத்தில் ஆடு மாடுகள் விற்றுக்கொண்டும் நாணயம் மாற்றிக் கொண்டும் கோயிலுக்குப் பொருந்தாத காரியங்களில் ஈடுபட்டிருந்தோரைத் தானே பின்னிய கயிற்றுச் சவுக்கால் அடித்து விரட்டுவார். ‘என் தகப்பனுடைய வீட்டை இனியும் சந்தைக்கடை ஆக்காதிர்கள்’ [யோவான் 2:19] என்பார். இக்கதையைப் படிக்கும் கிறித்துவர்களுக்கு எங்க வீட்டுப் பிள்ளையில் எம்.ஜி.ஆர். நம்பியாரை அடிக்கும் போது அவர் இயேசுவின் வழியில் செய்லபடுவதாகத் தோன்றும். எம்.ஜி.ஆரின் பாடலிலும் காட்சிகளிலும் இயேசு கிறிஸ்து இடம்பெற்றதால் கிறிஸ்தவர்கள் முதலில் ரசிகர்களாக இருந்தனர். பின்னர் அண்ணா திமுகவின் வாக்கு வங்கியாகவும் மாறினார்.

நான் எம்.ஜி.ஆர். ரசிகன் என்ற பெருமிதம்

எம்.ஜி.ஆரின் ரசிகர்கள் ‘நான் எம்.ஜி.ஆர். ரசிகன் பீடி சிகரெட் மது குடிக்க மாட்டேன், பெற்ற தாயைத் தெய்வமாகப் போற்றுகிறேன்’ என்று பெருமிதத்தோடு சொல்லிக் கொள்கின்றனர். எம்.ஜி.ஆரைப் பின்பற்றி அவரது ரசிகரான ராமராஜன் தனது படங்களில் எம்.ஜி.ஆரின் நல்ல

கொள்கைகளை பின்பற்றினார். அவர் நிஜத்திலும் படத்திலும் மது குடிப்பதில்லை, புகைப்பதில்லை பெண்களோடு தவறான உறவு கொள்வது போல காட்சி அமைப்பதில்லை. இன்று அரசியல் கட்சி தொடங்கியிருக்கும் கமல், ரஜினி, விஜயகாந்த் போன்றோர் தனி வாழ்வில் தூய பழக்க வழக்கங்களைப் பின்பற்றாததால் மக்களின் அன்பையும் ஆதரவையும் பெற இயலாமல் சிரமப்படுகின்றனர். ரசிகர்கள் ஆதரவு இருந்தும் பொதுமக்கள் ஆதரவு இவர்களுக்குக் கிடைக்கவில்லை. எம்.ஜி.ஆர். நடிகர் என்பதால் அரசியலில் வெற்றி பெறவில்லை என்பதை இன்றைய நடிகர்கள் நிரூபித்துவிட்டனர். எம்.ஜி.ஆர். 1951 முதல் மக்களின் அன்பையும் நம்பிக்கையையும் பெற்றிருந்தார். அதன் பலனை ஆரம்பத்தில் தி மு க அறுவடை செய்தது.

நான் ஆணையிட்டால் அது நடந்துவிட்டால் என்ற பாடல் எம்.ஜி.ஆர். சவுக்கை எடுத்துக்கொண்டு படிகளில் ஓடியாடி பாடுவதாக அமைந்திருக்கும். இவ்வாறு அவர் ஏறியும் பின்னர் தரையில் நடக்கும் போதும் அவருடைய காலடி வைப்புமுறை சிலம்பாட்ட வைப்பு முறையை ஒத்திருக்கும் என்று சிலம்பாட்டக் கலைஞர் கூறுகின்றனர். எம்.ஜி.ஆரின் மெய்க்காப்பாளர் ராமகிருஷ்ணனும் தன்னுடைய நூலில் இப்பாடல் பற்றி விளக்கம் அளித்துள்ளார்.

இப்பாடலில் அவர் தவறு செய்பவர் எவராக இருந்தாலும் நான் அதனைத் தட்டிக் கேட்பேன் என்று சொல்லுவது படத்தில் நம்பியாரைக் குறித்தாலும் காங்கிரஸ்காரர்களைக் குறித்ததாகவே மக்கள் புரிந்துகொண்டனர். தவறு செய்யும்

காங்கிரஸ்காரர்களை விடமாட்டேன் என்றும் அவர்களைத் தண்டிப்பேன் என்றும் மறைமுகமாகப் பாடலின் வழியாகக் கூறுகின்ற துணிச்சல் எம்.ஜி.ஆருக்கு இருந்தது.

கருப்பு சட்டைக்காரரர் எம்.ஜி.ஆர்.

எம்.ஜி.ஆர். காலத்தில் திமுகவைக் கறுப்புச் சட்டை கட்சி என்றும் கம்யுனிஸ்ட் கட்சியை சிவப்பு சட்டைக் கட்சி என்றும் அழைப்பது வழக்கம். எம்.ஜி.ஆர். திமுக தத்துவங்களை, வாழ்வியல் முறைகளை எடுத்துச் சொல்லும் பாடல்களைப் பாடும் காட்சியில் கருப்பு சட்டை அணிந்து அதன் மூலமாகத் தன்னைத் திமுககாரரர், எதிர்க்கட்சிக்காரரர் என்று துணிச்சலாக அடையாளம் காட்டுவார். இந்தப் பாடலில் அவர் கருப்புச்சட்டை அணிந்து பாடியதால் கருப்புச்சட்டைக்காரரர் என்பதும் புரிந்து கொள்ளப்பட்டது. ஒரு தலைவன் உண்டு அவன் கொள்கை உண்டு எப்போதும் காத்திருப்பேன் என்ற வரிகள் அண்ணா என் தலைவர் திமுக என்னுடைய கொள்கை இதன்படி எப்போதும் நான் நடப்பேன் என்று தன்னை அவர் அறிமுகம் செய்து கொள்வதாக அமைந்தன. முதலில் நம்பியாரை எம்.ஜி.ஆர். அடிக்கும் போது சிவப்புச் சட்டையும் வெள்ளைப் பேண்ட்டும் அணிந்திருப்பார் அப்போது பாட்டு கிடையாது. பாட்டுக் காட்சியில் கருப்புச் சட்டை அணிந்திருப்பார்.

சந்திரோதயம் படத்தில்

‘புத்தன் ஏசு காந்தி பிறந்தது
பூமியில் எதற்காக – தோழா
ஏழை நமக்காக



என்று பாடும் பாடல் காட்சியிலும்

அச்சம் என்பது மடமையடா
அஞ்சாமை திராவிடர் உடைமையடா
ஆறிலும் சாவு நூறிலும் சாவு
தாயகம் காப்பது கடமையடா

என்ற மன்னாதி மன்னன் பாட்டுக் காட்சியிலும்

நான் உங்கள் வீட்டு பிள்ளை–இது
ஊர் அறிந்த உண்மை'
நான் செல்லுகின்ற பாதை

பேரறிஞர் காட்டும் பாதை என்று புதிய பூமியில் பாடும் காட்சியிலும் கருப்பு உடை அணிந்திருப்பார்.

பண்டரிபாய் படி இறங்கி வரும்போது

"பொது நீதியிலே புதுப் பாதையிலே வரும்
நல்லோர் முகத்திலே விழிப்பேன்"

என்று பாடும்போது அது பண்டரிபாயைப் பார்த்து பாடுவதாக இருந்தாலும் படம் பார்க்கும் மக்களுக்கு அவ்வரிகள் அடுத்து ஆட்சிக்கு வரவிருக்கும் திமுகவின்ரை பற்றி முன்கூட்டியே சொல்வதாகத் தோன்றியது. உடலுழைப்பு இன்றி சுரண்டி கொழுத்த லாபம் பார்க்கும் சில பண முதலைகள் உழைப்பாளிகளின் வியர்வையை உறிஞ்சும் அட்டை பூச்சிகளாக இருப்பதை கண்டிக்கும் எம்.ஜி.ஆர்.,

> *"உடல் உழைக்கச் சொல்வேன் அதில்*
> *பிழைக்கச் செய்வேன் அவர்*
> *உரிமை பொருட்களை தொட மாட்டேன்"*

என்று பாடும்போது ஏழை எளிய மக்கள் சுரண்டும் முதலாளிகள் உழைப்பின் மகிமையை உணர்ந்து கொள்ள வேண்டும் என்பது உணர்த்தப்படுகிறது. மேலும் இவ்வரிகள் உழைப்பை சுரண்டும் பணக்காரர்களாக இருந்தாலும் அவர்களுக்கு உரிமையான பொருட்களை ஏழைகள் எடுத்துக் கொள்ள விரும்புவது இல்லை அவர்களுக்கு தேவை உழைப்புக்கு உண்டான ஊதியம் மட்டுமே, என்பதையும் இப்பாடல் வரிகள் சுட்டுகின்றன. இவ்வரிகள் ஏழைகள் பணக்காரருக்கு எதிரி அல்ல என்பதை உணர்த்துகின்றன.

ஏழையும் செல்வரும்

ஏழை என்பவன் பணக்காரனுக்கு எதிரி அல்ல என்ற கருத்தாக்கம் குறித்துச் சிந்திக்கும்போது பணக்காரரிடமிருந்து பணத்தைப் பறித்து ஏழைகளுக்குக் கொடுக்க வேண்டும் என்று சொல்லாமல் எல்லோரும் உழைக்க வேண்டும்

உழைப்புக்கேற்ற ஊதியம் கொடுக்கப்பட வேண்டும் என்ற சமதர்மக் கொள்கை வலியுறுத்தப் படுகிறது. உழைக்காதவனுக்கு உணவு உண்ணும் உரிமை கிடையாது. எனவே அனைவரும் தத்தம் திறமைக்கேற்ற படி தகுதியான வேலையைச் செய்ய வேண்டும். அதற்குரிய ஊதியத்தை பெற்றுக்கொள்ள வேண்டும் என்ற கருத்து உணர்த்தப்படுகிறது. நாடோடி மன்னன் படத்தில் ஏழைகளுக்கான சலுகைகளை எடுத்துரைக்கும் போது ராஜ சபையில் இருக்கும் கார்மேகம் எழுந்து நின்று 'அப்படி என்றால் பணக்காரர்களே இருக்கமாட்டார்கள்' என்று கூறுவார். அப்போது மன்னனாக இருக்கும் நாடோடி எம்.ஜி.ஆர். 'தவறு பணக்காரர்கள் இருப்பார்கள் ஏழைகள் இருக்கமாட்டார்கள்' என்று ஆணித்தரமாகப் பதில் உரைப்பார். இதே கருத்து இப்பாடலிலும் வலியுறுத்தப்படுகிறது. எம்.ஜி.ஆர். பணக்காரர்களுக்கு எதிரி அல்ல அவர் ஏழைகளுக்கு தோழன். ஏழைகளும் பணக்காரர்களாக ஆக வேண்டும் என்பதுதான் குறிக்கோளேத் தவிர பணக்காரர்களை ஏழை ஆக்கவேண்டும் என்பது அல்ல. எனவே இவருடைய படங்களை ஏழை பணக்காரர் என அனைவரும் கண்டு ரசித்தனர்.

நடுத்தர வர்க்கமாக உயர்ந்து விட்ட ஏழைகள்

இன்றைய புள்ளிவிவரங்கள தமிழகத்தில் மட்டும் பெருவாரியான மக்கள் மேல்-நடு-கீழ் என்று மூவகையாகப் பிரிக்கப்பட்ட நடுத்தரக் குடும்பங்களைச் சேர்ந்தவர்களாக இருக்கின்றனர் என்பதை உறுதி செய்கிறது. இதனால் நாட்டில் தமிழகத்தில் வசிப்போர் மற்ற மாநிலங்களில் வசிப்பவர்களை விடவும் அடிப்படை தேவைகளும்

விருப்பங்களும் *NEEDS AND WANTS SATISFIED]* நிறைவேற்றப்பட்டவர்களாக அதிக வசதிகள் பெற்றவர்களாக இருக்கின்றனர் என்பது மத்திய அரசின் புள்ளி விவரங்கள் மூலமாக ஐயமின்றி நிறுவப்பட்டுள்ளது. தமிழகத்தில் இருந்த ஏழைகளில் பெரும்பாலோர் இன்று நடுத்தர வர்க்கத்தினராக செல்வத்திலும் உடல்நலத்திலும் கல்வி மற்றும் வேலை வாய்ப்பிலும் உயர்ந்திருப்பதை அறியலாம்.

"முன்பு ஏசு வந்தார் பின்பு காந்தி வந்தார் இந்த மானிடர் திருந்திட பிறந்தார் இவர் திருந்தவில்லை மனம் வருந்தவில்லை அந்த மேலோர் சொன்னதை மறந்தார்" என்ற வரிகள் ஏசு காந்தி போன்ற மகான்களின் பொன்மொழிகளுக்கு மக்கள் செவிசாய்க்கவில்லை என்பதை வலியுறுத்துகின்றன. எம்.ஜி.ஆர். உடைய படங்களிள் பாடல்களிலும் காட்சிகளிலும் இயேசு, புத்தர், காந்தி ஆகியோரின்



படங்களும், கருத்துக்களும் இடம் பெறுவதை காணலாம். எம்.ஜி.ஆர். வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து வானுறையும் தெய்வத்துள் வைக்கப்பட்ட மாமனிதர்களை தன் ரசிகர்களுக்கு அடையாளம் காட்டி அவர்களைப்போல சிறப்பான வாழ்க்கை வாழ வேண்டும் என்பதை ஒரு வழக்கமாகக் கொண்டிருந்தார். இப்படத்திலும் ஏசு, காந்தி சொன்ன கருத்துக்கள் வெற்றாக போய்விடக்கூடாது என்ற கவலை உணரப்படுகிறது. இங்கு காந்தியைப் பற்றி குறிப்பிடுவதற்கு முக்கிய காரணம் காங்கிரஸ்காரர்களுக்கு காந்தியின் முதல் தலைவர் அவருடைய வழியில் பின்பற்றுவோர் அல்லது பின்பற்ற கடமைப்பட்டவர் என்பதால் அவருடைய சொற்களை மறந்து விட்டீர்களே, நீங்கள் திருந்தவே மாட்டீர்களா?, நீங்கள் செய்த தவறுக்கு வருந்த மாட்டீர்களா? என்று காங்கிரஸ்காரர்களை கேட்பதாக எழுதப்பட்டன.

காங்கிரசை ஒழிப்பேன்

சரணத்தில் வரும் இரண்டு வரிகள் தணிக்கை அதிகாரிகளால் அனுமதிக்கப் படாததால் மாற்றப்பட்டன. ஆரம்பத்தில்

எதிர்காலம் வரும்
என் கடமை வரும் இந்தக்
காக்கைகள் கூட்டத்தை ஒழிப்பேன்

என இடம்பெற்றிருந்தது. காக்கைகள் கூட்டம் என்பது காங்கிரஸ்காரர்களைக் குறித்ததாகத் தணிக்கை அதிகாரிகள் கருதியதால் அந்த வரியை அனுமதிக்க மறுத்தனர். பின்பு கவிஞர் வாலி அவ்வரிகளை நீக்கிவிட்டு

எதிர்காலம் வரும்
என் கடமை வரும் இக்
கூட்டத்தின் ஆட்டத்தை ஒழிப்பேன்

என்று மாற்றினார். அதன் பிறகு தணிக்கைக் குழுவினரின் அனுமதி கிடைத்தது. இக்கூட்டம் என்பது காங்கிரஸ்காரர்களைக் குறித்தது என்றாலும் காக்கை என்ற சொல் நீக்கப்பட்டது குறித்து தணிக்கையாளர் திருப்தி அடைந்தனர். திரைப்படத்தில் மட்டும் இந்த வரி மாற்றம் நடந்தது. இசைத்தட்டுகளில் காக்கைகள் கூட்டம் என்று தான் பதிவாகி இருந்தது. இலங்கை வானொலியில் 1965 முதல் ஈழப் பிரச்சனை வரும் வரைக்கும் இப்பாடல் காக்கைகள் கூட்டத்தை ஒழிப்பேன் என்ற வரிகளோடு தான் ஒலிபரப்பப்பட்டது. அதன் பிறகு ஒலி பரப்பு நிறுத்தப்பட்டது.

அண்ணா பாராட்டிய எம்.ஜி.ஆரின் பிரச்சார வீச்சு

எம்.ஜி.ஆர். தம் பாடல்களின் மூலமும் காட்சிகளின் மூலமும் திமுக பிரச்சாரத்தை நேரடியாக மக்களிடம் செய்து வந்ததனால் அண்ணா அவர்கள் எம்.ஜி.ஆரிடம் மிகுந்த அன்பு காட்டினார். திமுக கட்சியினர் குறிப்பாக இரண்டாம் கட்டத் தலைவர்கள் எம்.ஜி.ஆரை வெறும் சினிமாக்காரன் என்று குறிப்பிட்ட போது அண்ணா அவர்கள் நம் கட்சிக்காரன் ஒரு மேடையில் பேசினால் 5000, 6000 பேர்களுக்கு கட்சிக் கொள்கைகளை கொண்டுசேர்க்க முடியும். ஆனால் எம்.ஜி.ஆர். தன்னுடைய படத்தில் ஒரு பாட்டின் மூலம் சுமார் 5 லட்சம் பேருக்கு நம் கட்சி கொள்கைகளைக் கொண்டு சேர்க்கிறார் என்று எம்.ஜி.ஆரின் பிரச்சாரப் பணியை அண்ணா பாராட்டிக் கூறினார். எம்.ஜி.ஆர்.



எங்கள் ஆட்சி வந்துவிட்டால் உங்கள் கவலைகள் தீரும் என்ற ஒற்றை கருத்தை இப்பாடலின் மூலம் திரும்பத் திரும்ப அவர்களின் மனத்தில் பதிய வைத்தார். மேலும் இப்பாட்டில் இடம் தாங்களே கொடுத்த சவுக்கடியாகத் தோன்றியது. இதனை ஆங்கிலத்தில் வைக்க *vicarious feeling* என்பர். இதனால் அவர்களுடைய மனம் ஆறுதல் அடைந்தது, உற்சாகம் பிறந்தது. தங்களைக் கொடுமைப்படுத்துவோருக்குத் தாமே தண்டனை கொடுத்தது போன்ற மனநிறைவை பெற்றனர். இவ்வகையில் இப்பாட்டு காட்சியாலும் கருத்தாலும் மக்களின் மனதைக் கொள்ளை கொண்ட பாட்டாக அமைந்தது. இன்றைக்கும் இந்த பாட்டு பெரும் வரவேற்பை பெற்றுள்ளது.

போஸ்டரும் போஸ்சும்

எம்.ஜி.ஆரின் எங்கள் வீட்டு பிள்ளை படப் போஸ்டரில் நான் ஆணையிட்டால் பாட்டு காட்சி தவறாமல் இடம்பெற்றது. ஒருநாள் எம்.ஜி.ஆர். திடீரென்று தன் ஒளிப்பதிவாளர் சங்கர் ராவை

அழைத்து தானே சாட்டையை வீசிய படியும் சுற்றிப் பிடித்த படியும் சில போஸ்களை கொடுத்துப் படமெடுக்கச் சொன்னார். அந்தப் போஸ்கள் தான் சிறப்பான படங்களாக அவர் கைக்கு வந்து சேர்ந்தன. புகைப்படக்காரரே அசந்து போகும் அளவுக்கு அந்தப் படங்கள் மிக அழகாக வந்திருந்தன. இதனை அவர் தனது நூலில் குறிப்பிட்டுள்ளார். இந்த போஸ் உள்ள படங்கள் மறு நாள் செய்திதாள்களில் முழுப்பக்க விளம்பரமாக இடம்பெற்றன. அந்த விளம்பரமே படத்தை பற்றிய மிகப் பெரிய எதிர்பார்ப்பை மக்கள் மனதில் உருவாக்கியது. சவுக்கை வீசியும் சுற்றியும் பிடித்திருக்கும் படங்கள் எம்.ஜி.ஆர். பற்றிய பிம்பத்தை பெரும் உயரத்துக்குக் கொண்டு சென்றன.

தெய்வத்தின் காட்சி

தெய்வத்தின் தன்மை துஷ்ட நிக்ரக இஷ்ட பரிபாலன் என்பதாகும். அதாவது தீயவர்களை அழித்து நல்லவர்களை காப்பதாகும். இத்தெய்வத்தின் பணியை எம்.ஜி.ஆர். எங்க வீட்டுப் பிள்ளை படத்தின் சவுக்கடி காட்சியில் நான் ஆணையிட்டால் பாட்டில் நிகழ்த்திக் காட்டுகிறார். எம்.ஜி.ஆர். சவுக்கோடு காட்சி அளிக்கும் சாமி படத்துக்கு நிகரானதாகும். தெய்வங்கள் அசுரர்களை அல்லது தீயவர்களை அழிக்க ஆயுதங்களை கொண்டிருக்கும். தெய்வங்கள் வில், வேல், வாள், சக்கராயுதம், வஜ்ராயுதம், கதாயுதம் போன்ற ஆயுதங்கள் தீயவர்களை அழிப்பதற்காக தங்கள் கையில் கொண்டுள்ளன. இதே கருத்தை எம்.ஜி.ஆர். கையிலிருக்கும் சவுக்கு [ஆயுதம்], படம் பார்ப்போருக்கு புலப்படுத்துகிறது. அவர் நல்லவர்களுக்கு



ஆதரவு அளித்து அவர்களை ரட்சிக்க, தீங்கு செய்பவர்களை சவுக்கால் அடித்துத் தண்டிப்பார் என்ற கருத்தை இப்படம் உணர்த்துவதால் இப்படம் தெய்வத்தின் படத்துக்கு நிகரானதாகும். சக்தியுள்ள தெய்வங்கள் என்பன புராணங்களில் அசுரர்களை வதம் செய்து கொன்றவையாகவே உள்ளன. அதுபோல எங்க வீட்டுப் பிள்ளை படத்தில் எம்.ஜி.ஆர். நல்லவர்களுக்குக் கொடுமை செய்த நம்பியாரை சவுக்கால் அடித்துக் கண்டிக்கிறார். அவரைக் கொல்லவில்லை. எனவே இவர் கருணை உள்ள கடவுள், துஷ்ட தெய்வம் அல்ல என்ற கருத்தும் பெறப்படுகிறது.

நிறைவு

ஏழை எளிய மக்களை அதிகார வர்க்கத்தினர் கேள்வி கேட்பாரின்றி அடித்து உதைக்கும் போது அவர்களின் மனம் வருந்தி அழுகின்றது. நமக்காக குரல் கொடுக்க எவரும் இல்லையே இத்துன்பத்தில் இருந்து தம்மை விடுவிக்க எவரும் இல்லையே என்று ஏங்கித் தவிக்கும் ஏழைக்கு அவர்களைக் கொடுமைப்படுத்த அதிகார வர்க்கம் பயன்படுத்திய



அதே சவுக்கைக் கொண்டு ஒருவன் திருப்பி அடிக்கும் போது அடி வாங்கியவனின் மனம் ஆறுதல் அடைகிறது. அடி வாங்கிய ஏழை தொழிலாளியால் அந்தப் பணக்காரனை அந்தச் சவுக்கை பிடுங்கிக்கொண்டு அடிக்க இயலாது. ஆனால் எம்.ஜி.ஆர். ஏழைப் பங்காளனாக ஒடுக்கப்பட்டோரின் சார்பாகச் செய்கிறார். பணியாளர்களை அடிக்க ஓங்கிய சவுக்கை பிடித்து இழுத்து நம்பியாரை கீழே தள்ளிவிட்டு எம்.ஜி.ஆர். சவுக்கை சொடுக்கும்போது படம் பார்ப்பவர்கள் தங்களால் முடிந்தவரை ஓங்கி கை தட்டுகின்றனர். கை வலிக்கும் வரை தட்டுகின்றனர். படம் வெளிவந்த காலங்களில் திரையரங்கில் இப்பாட்டைக் கேட்கவே இயலாது. கைதட்டும் சத்தத்தில் பாட்டின் வரிகளைக் கேட்கமுடியாது. திரையரங்கில் இப்பாட்டு முடியும் வரை விசில் சத்தமும் கை தட்டல் சத்தமும் ஓயாது. இன்றைக்கும் திரையரங்கங்களில் இதே நிலை நீடிப்பதைப் பார்க்கலாம். அலுவலகப் பணியாளருக்கும் அதிகாரிகளுக்கும் கூட தனது மேலதிகாரிகளால் இத்துன்ப நிலை உண்டாகிறது. எனவே எல்லாக் காலத்திலும் இப்பாட்டுக்கு வரவேற்பு இருப்பது உறுதி. இப்பாட்டின் ஒவ்வொரு வரியையும் படம் பார்க்கும் ஒவ்வொருவரும் தானே பாடுவதாக நினைத்து மகிழ்ந்து உற்சாகமாகின்றனர். இத்தகைய பேருவகையை பெரு மகிழ்ச்சியை இப்பாடல் ஏற்படுத்துவதால் இந்தியத் திரையரங்கில் மிகுந்த வரவேற்பு பெற்ற பாடலாக இப்பாடல் திகழ்கிறது.

இந்திய சினிமாப்பாடல்களில் மக்களை அதிகம் கவர்ந்த பாடல்...?

'இந்திய சினிமாவில் பாடல் காட்சிகளும், பாடல்களும் வகிக்கும் பங்கு' என்பதுபற்றி ஆய்வு செய்ய மேல்நாட்டிலிருந்து ஒரு குழு சில மாதங்களுக்கு முன் இந்தியா வந்திருக்கிறது. அவர்களின் ஆய்வு குறிப்பில் காணப்படும் சில தகவல்கள்....

'பாடலோடுகூடிய காட்சி திரையில் தோன்றும் பொழுது ரசிகர்கள்



எந்த லாஜிக்கையும் பற்றி கவலைப் படாமல் காட்சியுடன் ஒன்றி ரசிப்பதைப் பார்க்கும் போது ஆச்சரியமாக இருக்கிறது.'

சில படங்களுக்கு பாடல்காட்சிகளே வெற்றியைத் தேடித்தரும் காரணிகளாக அமைவது இந்தியாவில்தான்.

அதோடு, அந்தக் குழுவினர் படத்தில் வரும் எந்த பாடல் காட்சி பார்ப்பவரிடையே வெகுவான வரவேற்பைப் பெறுகிறது என்றும் ஆய்வு செய்திருக்கின்றனர். அதில் தமிழ்படத்தில் வரும் ஒரு பாடல் காட்சிதான் அரங்கத்தில் வெகுவான ஆரவாரத்தோடுகூடிய வரவேற்பைப் பெற்றிருப்பதாகக் குறிப்பிடப் பட்டிருக்கிறது.

புரட்சித் தலைவர் நடித்த 'எங்கள் வீட்டுபிள்ளை' யில் இடம் பெற்றுள்ள 'நான் ஆணையிட்டால் அது நடந்து விட்டால்...' என்ற பாடல்காட்சி தான் வெகுவான வரவேற்பைப் பெற்றுள்ளதாம். வேறு எந்த இந்தியப் படத்தின் பாடலும் அப்படி ஒரு ஆரவாரமிக்க வரவேற்பைப் பார்வையாளர்களிடம் பெறவில்லையாம்!

5. பத்திரிகைகள் பாராட்டிய படம் எங்க வீட்டுப் பிள்ளை

ஆனந்த விகடன், கல்கி, ஆங்கிலச் செய்தித்தாள் ஹிண்டு ஆகியன் மேட்டுக்குடியினரின் பத்திரிகையாக இருந்ததால் எம்.ஜி.ஆரை ஏழைகளின் பாமரர்களின் நடிகர் என்று கேலி செய்து அவரது படங்களை ஆதரிப்பதில்லை.. அத்தி பூத்தது போல எங்க விட்டுப் பிள்ளைக்கு அதிசயமாக் பாராட்டு கிடைத்தது. அவற்றில் ஆனந்த விகர்டன் மற்றும் ஹிண்டு பத்திரிகைகளின் பாராட்டுதலான விமர்சனங்கள் கிலே கொடுக்கப்பட்டுள்ளன.

ஆனந்த விகடனில் வந்த விமர்சனம்.

எங்க வீட்டுப் பிள்ளை 1965

ஒரே மாதிரி இருக்கும் இரு நபர்களின் ஆள் மாறாட்டத்தை அடிப்படையாகக் கொண்டு வந்த படங்களிலேயே இதுதான் சிறந்த படம்.

இடம் மாறி வந்தவர்கள், தொடர்ந்து அங்கேயே தங்கிவிடவேண்டிய அவசியத்தை ஏற்படுத்தி இருப்பதில் இந்தக் கதை புதுமையாக இருந்தது.

முன் பின் தெரியாத ஒருத்தியின் நல்வாழ்வுக்காகவும், அவள் குழந்தையின் மேல் உள்ள பாசத்துக்காகவும் ஜமீன்தார் வீட்டில் இளங்கோ ராமுவாகவே இருக்கவேண்டிய சூழ்நிலையை ஏற்படுத்தியது மிகவும் பொருத்தமாக இருந்தது.

இளங்கோ ஜமீன் மாளிகைக்குள் நுழைந்தவுடன், அந்த வீட்டுக் கதை முழுவதையும் பாத்திரங்களின் பேச்சின் மூலமே இளங்கோவுக்குப் புரிய வைத்தது, நல்ல அமைப்பு!

இரட்டையரின் இரு பாத்திரப் படைப்புகளுமே பிரமாதம்தான்!

எம்.ஜி.ஆர். நடித்த விதம், அதை விடப் பிரமாதம்.

பயந்தங்கொள்ளியாக வரும்போது, சிரிப்புடன் அழவும் வைக்கிறார். முரடனாக வரும்போது, வீரத்தைக் காட்டிச் சிரிக்க வைக்கிறார்.

நம்பியாரிடம் அவர் சவுக்கடி வாங்கி, தற்கொலை செய்துகொள்ளும் எண்ணத்துடன், 'நானும் உங்களுடன் வந்துவிடுகிறேன் அப்பா' என்று பெற்றோரின் படத்துக்கு முன் நின்று சைகையால் பேசும் இடம், எவர் உள்ளத்தையும் உருக வைக்கும்.

இரண்டு பாத்திரப் படைப்பும் நன்றாகவே இருந்தன. ஆனால் வீட்டை விட்டு வந்த இரண்டு பேரும் அம்மாவைப் பற்றியோ, அக்காவைப் பற்றியோ கொஞ்சமும் கவலைப்படாமல் இருந்ததுதான், அவ்வளவு சரியாக இல்லை!

சரோஜா தேவிக்குப் புது மாதிரி ரோல். எப்போது பார்த்தாலும் அப்பாவை மட்டம் தட்டிக்கொண்டு, தினுசு தினுசாகப் புடவை கட்டிக் கொண்டு,

காதிலே ஏதேதோ மாட்டிக் கொண்டு, அந்த அருமையான கலருக்கும், படப்பிடிப்புக்கும் பார்த்துக் கொண்டே இருக்கலாம்!

வின்சென்ட் – சுந்தரம் படப்பிடிப்பு, படத்துக்குத் தனிச் சிறப்பு கொடுத்தது. முக்கியமாக, பிருந்தாவனத்தில் அழகு கொழித்தது.

ஓரிடத்தில், கீழே படுத்திருக்கும் எம்.ஜி.ஆரை மாடியிலிருந்து மிக அற்புதமாகப் படம் பிடித்துக் காட்டியிருக்கிறார்கள்.

இந்தப் படத்திலே இன்னொரு புதுமை தங்கவேலு – நாகேஷ் காமெடி ஜோடி!

ரொம்ப நாளைக்கப்புறம் தங்கவேலுவைப் பார்க்கிறதே சந்தோஷமா இருந்தது. அந்த மாவு மில்லிலே அவர் நடுங்கிக்கொண்டே நடக்கிற இடம்…அது தங்கவேலு முத்திரை! நாகேஷ் அந்த அசட்டு முகத்தையும், அரை மீசையையும் வைத்துக் கொண்டு ரொம்ப பிரமாதமாக நடிச்சிருக்கார்

மொத்தத்திலே பொழுது போகிறதே தெரியாமல் விறுவிறுப்பாகப் போகிறது படம்.

சினிமா சக்சஸ் வரலாறுனா இப்படி இருக்கணும்.. இந்து

எங்க வீட்டுப் பிள்ளையின் பிரமாண்ட வெற்றி பெற்ற 1965 ஆம் ஆண்டு அப்போது The Hindu

பத்திரிகை ஒரு கட்டுரை வெளியிட்டது. இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு அந்த கட்டுரையை மறுபிரசுரம் செய்தது அதே பத்திரிகை..

அந்தக் கட்டுரையை மூத்த பத்திரிகையாளர் கதிர்வேல் அவர்கள் தமிழாக்கம் செய்து முகநூலில் பதிவிட்டு இருந்தார் அந்தப் பதிவு வருமாறு :

எங்க வீட்டுப் பிள்ளை – இந்தியத் திரைப்பட வரலாற்றில் ஒரு மைல் கல்.

வசூலில் இதுவரை கண்டிராத சாதனை படைத்த அந்த படம் இப்போது வெள்ளி விழா கொண்டாடுகிறது. படத்தின் தயாரிப்பாளர்கள், நடிகர் நடிகைகள், தொழில்நுட்ப கலைஞர்கள் பாராட்டு மழையில் நனைகிறார்கள். படத்தை வினியோகித்தவர்களும் திரையிட்டவர்களும் லாபத்தில் திளைக்கிறார்கள்.

சமீப காலங்களில் ஒரு படம் வெள்ளி விழா காண்பதே அரிதாகி விட்டது. கல்யாணப் பரிசு, பாவ மன்னிப்பு, பாச மலர், காதலிக்க நேரமில்லை ஆகிய படங்கள் மட்டுமே வெள்ளி விழா கண்டு இருக்கின்றன. ஆனால் அந்த பெருமையும் எங்க வீட்டுப் பிள்ளையின் சாதனைக்கு நிகராகாது.

எப்படி என்றால், அந்த படங்கள் எல்லாம் ஏதேனும் ஒரு தியேட்டரில் மட்டுமே 25 வாரங்கள் ஓடி வெள்ளி விழா கொண்டாடின. எங்க வீட்டு பிள்ளையோ மெட்ராசில் மட்டுமே கேசினோ, பிராட்வே, மேகலா ஆகிய 3 தியேட்டர்களில் வெள்ளி விழா தாண்டி சக்கைபோடு போடுகிறது. இது தவிர மதுரை, கோயமுத்தூர், திருச்சி, தஞ்சாவூர்

என வேறு ஊர்களிலும் இந்த சாதனையை புரிந்திருக்கிறது.

படத்தின் உருவாக்கத்தில் பங்கேற்ற ஒவ்வொருவரும் இந்த மகத்தான சாதனையை நினைத்து பெருமை கொள்ளலாம். ஒட்டுமொத்த தென் இந்திய திரை உலகமே அவர்களுக்கு தலை வணங்குகிறது.


ஆச்சரியம் என்ன என்றால், வினியோகஸ்தர்கள், தியேட்டர் அதிபர்கள் ஆகியோரைக் காட்டிலும் எங்க வீட்டு பிள்ளை மூலமாக அதிகம் சம்பாதித்து இருப்பது நமது அரசாங்கம்தான். இந்தியா முழுவதிலும் இருந்து இந்த ஒரு படத்தின் மூலமாக மட்டும் அரசாங்கத்துக்குக் கிடைத்திருக்கும் கேளிக்கை வரி எவ்வளவு தெரியுமா? 50 லட்சம்!

எங்க வீட்டுப் பிள்ளை படத்தின் பிரமிக்க வைக்கும் இந்த வருமானமும் லாபமும் திரைப்படத் தயாரிப்பிலும் வினியோகத்திலும் ஈடுபட்டுள்ள அனைவருக்கும் புதிய நம்பிக்கையையும் ஊக்கத்தையும் அளித்து அவர்கள் இன்னும் இன்னும் அதிகமாக முதலீடு செய்ய தூண்டுதலாக அமைந்துள்ளது.

மதராஸ் பட்டணத்தில் வசிக்கின்ற மொத்த ஜனங்களான 20 லட்சம் பேரில் 12 லட்சம் பேர் எங்க வீட்டுப் பிள்ளை படத்தைப் பார்த்து ரசித்திருக்கிறார்கள் என்றால் நிச்சயமாக அது சாதாரண சாதனை கிடையாது.

ஒரு திரைப்படம் இந்த அளவுக்கு மகத்தான வெற்றி பெற்றதற்கு என்ன காரணம்?

காரணங்களை கண்டுபிடிக்க சிரமப்பட தேவையில்லை. ஒரு தடவை பார்த்தவர்களைத் திரும்பத் திரும்ப தியேட்டருக்கு வரவழைக்கும் விதமாக படத்தின் கதை அனைத்துத் தரப்பு மக்களுக்கும் பிடித்திருந்தது என்பது முதல் காரணம்.



மிகச் சிறந்த பொழுதுபோக்கு அம்சங்கள் தவிர, படத்தின் மூலம் மக்கள் மனதில் பதிய வைக்கப்படும் நீதியும் இன்னொரு காரணம். தனிமனித ஒழுக்கத்தை உயர்த்திப் பிடிக்கும் கதையம்சம் அனைவரையும் கவர்ந்திருக்கிறது.

நடுங்கும் கோழையாகவும் அட்டகாசமான ஜாலிப் பேர்வழியாகவும் இரண்டு வேடங்களில் வெளுத்துக் கட்டியிருக்கும் எம்.ஜி.ஆரின் பிரமாதமான நடிப்பு வேறு எதை விடவும் முக்கியமான காரணம்.

இரண்டு முற்றிலும் வேறுபட்ட பாத்திரங்களுக்கு உயிர் கொடுக்கும் வகையில் அற்புதமாக நடித்திருந்தாலும், கோழையான நல்லவனாக எம்.ஜி.ஆர். தோன்றும் ஒவ்வொரு காட்சியிலும் அபார நடிப்பாலும் வசன உச்சரிப்பாலும் அத்தனை பேரின் உள்ளங்களையும் கொள்ளையடிக்கிறார்.

தேர்ந்த விமர்சகர்கள், சினிமா விற்பன்னர்கள், சராசரி ரசிகர்கள் எல்லோரும் சொக்கிப் போகிறார்கள் அவர் இரு வேடங்களிலும் வெளிப்படுத்தும் முக பாவங்களையும் உடல் அசைவுகளையும் பார்த்து. அபாரமான நடிப்புத் திறன் கொண்ட எம்.ஜி.ஆர். இந்தப் படத்தின் மூலமாக பல தடங்களைத் தாண்டியிருக்கிறார் என்று அவர்கள் ஏகோபித்து சிலாகிக்கிறார்கள்.

எங்க வீட்டுப் பிள்ளை எம்.ஜி.ஆரின் தனிப்பட்ட வெற்றி என்றும் தாராளமாக சொல்லலாம். இதுவரை அவரே சொந்தமாக தயாரித்து இயக்கி வெளியிட்ட நாடோடி மன்னன்

படம்தான் தமிழில் மிகப்பெரிய வசூலைக் குவித்த படமாக இருந்து வந்தது. எங்க வீட்டுப் பிள்ளை படத்தின் மூலமாக தனது சாதனையை அவரே முறியடித்திருக்கிறார்.

இந்த படம் இதுவரை வெளியான எந்தப் பட த்தையும் விட பல வகையிலும் மேம்பட்டது. கண்ணைப் பறிக்கும் வண்ணப் படம் என்பது பிரதானமான அம்சம். காட்சி அமைப்பில் ஆகட்டும், தொழில் நுட்ப நேர்த்தியில் ஆகட்டும் இது புதிய மதிப்பீடுகளை கோரும் படம். மொத்தப் படப்பிடிப்பும் 45 நாட்களில் முடிந்தது புதிய சாதனை. பூஜை போட்ட இரண்டரை மாதத்தில் படம் திரைக்கு வந்து விட்டது என்பதே பிரமிக்க வைக்கும் நிகழ்வாகும். இந்தியாவில் வேறு எந்தப் படமும் இந்த சாதனையை புரிந்ததில்லை.

இது எப்படி சாத்தியமானது என்று தயாரிப்பாளர் நாகிரெட்டி, சக்கரபாணியை கேட்டால் ஒரே நபரை கைகாட்டுகிறார்கள்.

“பணத்தை முதலீடு செய்தவர்கள் நாங்கள்தான் என்றாலும், இது முழுக்க முழுக்க எம்.ஜி.ஆர். படம். அவரே கதாநாயகன், அவரே தயாரிப்பாளர், அவரே இயக்குனர் என்று சொல்லும் அளவுக்கு எல்லா பொறுப்புகளையும் தோளில் சுமந்தார். அவருடைய திறமைக்கும் வேகத்துக்கும் ஈடுகொடுக்க எல்லோரும் திணறிப் போனோம். படத்தின் ஒவ்வொரு ஃபிரேமையும் பார்த்துப் பார்த்துச் செதுக்கினார். ஒவ்வொரு நாளும் 16 முதல் 18 மணி நேரம் எம்.ஜி.ஆர். இந்தப் படத்துக்காக

உழைத்ததைப் பார்த்து அசந்து விட்டோம்'' என்று சொன்னார்கள் இரு ஜாம்பவான்களும்.

எம்.ஜி.ஆருக்கு நடிக்க வராது என்பதுதான் இதுவரை பொதுவான ஒரு கருத்தாக சொல்லப்பட்டது. ஜாலியாக வந்து ஆடிப்பாடி சிரித்துச் சண்டை போட்டு மகிழ வைக்கும் கதாபாத்திரங்களில் மட்டுமே அவரால் ஜொலிக்க முடியும் எனப் பலரும் நினைத்தார்கள்.

அவ்வளவு எதற்கு. நிறைய படித்த, பல மொழி படங்களை பார்த்து ரசிக்கும் திரைப்பட ரசிகர்கள் 'நான் எம்.ஜி.ஆர். படத்துக்கெல்லாம் போவதில்லை' என்று கொஞ்சம் கர்வத்துடனே சொல்லுவார்கள். அவர்களுக்கெல்லாம் எங்க வீட்டுப் பிள்ளை மூலம் சரியான பதிலடி கொடுத்திருக்கிறார் எம்.ஜி.ஆர்.. எம்.ஜி.ஆருக்கு நடிக்க தெரியுமா என்ற கேள்வியை இனி அவர்கள் கனவிலும் கேட்க மாட்டார்கள்.

எம்.ஜி.ஆர். மிகச் சிறந்த நடிகர் மட்டுமல்ல. பன்முகத் திறமை, தொழில் ஈடுபாடு, கடின உழைப்பு, கடைநிலை தொழிலாளிகளையும் சமமாக பாவித்து பாராட்டும் நட்புணர்வு எல்லாமே அவரது வெற்றிக்கு உதவியிருப்பதை இப்போது எல்லோரும் புரிந்து கொள்வார்கள்.

இந்த நல்ல குணங்கள் எம்.ஜி.ஆரிடம் வெளிப்படுவது திரையில் மட்டுமல்ல. நிஜ வாழ்க்கையிலும்தான். அதனால்தான் அவருக்கு இத்தனை பிரமாண்டமான ரசிகர் பட்டாளம் வாய்த்திருக்கிறது.

பின் இணைப்பு:

திரைப்படப் பாடல்கள்

1.

எழுதியவர் : *ஆலங்குடி சோமு,* ***இசை :*** *விஸ்வநாதன் ராமமூர்த்தி,* ***பாடியவர் :*** *L.R. ஈஸ்வரி*

கண்களும் காவடி சிந்தாகட்டும்
காளையர் நெஞ்சத்தை பந்தாடட்டும்
கண்களும் காவடி சிந்தாகட்டும்
காளையர் நெஞ்சத்தை பந்தாடட்டும்
பெண்மையும் ஆண்மையும் ஒன்றாகட்டும்
பேரின்ப வாசலில் நின்றாடட்டும்
கண்களும் காவடி சிந்தாகட்டும்
காளையர் நெஞ்சத்தை பந்தாடட்டும்

உள்ளங்கள் நேரான வழி காணட்டும்
உறுதியிலே துன்பம் தூளாகட்டும்
உள்ளங்கள் நேரான வழி காணட்டும்
உறுதியிலே துன்பம் தூளாகட்டும்
நன்மையே உன் வாழ்வில் தொழிலாகட்டும்
நாடெல்லாம் உன்னை கண்டு புகழ் பாடட்டும்
நாடெல்லாம் உன்னை கண்டு புகழ் பாடட்டும்

ஆ.. கண்களும் காவடி சிந்தாகட்டும்
காளையர் நெஞ்சத்தை பந்தாடட்டும்

மண்ணகமெல்லாம் நதி பாயட்டும்
மார்கழி துதி பாடி கதிர் சாயட்டும்
கதிர் சாயட்டும் கதிர் சாயட்டும்
என்ன செய்வோம் என்ற நிலை மாறட்டும்
உன்னாலே மக்கள் எண்ணம் நிறைவேறட்டும்
உன்னாலே மக்கள் எண்ணம் நிறைவேறட்டும்

கண்களும் காவடி சிந்தாகட்டும்
காளையர் நெஞ்சத்தை பந்தாடட்டும்

தூங்கிய காலங்கள் முடிவாகட்டும்
தோள்களிலே வீரம் நடை போடட்டும்
நடை போடட்டும் வீரம் நடை போடட்டும்
கொள்கயிலே அன்பு ஒளி வீசட்டும்
கோழையும் உன்னாலே புலி ஆகட்டும்
கோழையும் உன்னாலே புலி ஆகட்டும்

கண்களும் காவடி சிந்தாகட்டும்
காளையர் நெஞ்சத்தை பந்தாடட்டும்
பெண்மையும் ஆண்மையும் ஒன்றாகட்டும்
பேரின்ப வாசலில் நின்றாடட்டும்

****

2.

எழுதியவர் : *வாலி,* ***இசை :*** *விஸ்வநாதன் ராமமூர்த்தி,*
பாடியவர் : *P. சுசிலா, T.M. சௌந்தரராஜன்*

குமரிப்பெண்ணின் உள்ளத்திலே குடியிருக்க நான் வரவேண்டும்
குடியிருக்க நான் வருவதென்றால் வாடகை என்ன தரவேண்டும்

குமரி பெண்ணின் கைகளிலே காதல் நெஞ்சை தரவேண்டும்
காதல் நெஞ்சை தந்து விட்டு குடியிருக்க நீ வரவேண்டும்
குமரி பெண்ணின் கைகளிலே காதல் நெஞ்சை தரவேண்டும்

காதல் நெஞ்சை தந்து விட்டு குடியிருக்க நீ
வரவேண்டும்

திங்கள் தங்கையாம் தென்றல் தோழியாம்
கன்னி ஊர்வலம் வருவாள்
திங்கள் தங்கையாம் தென்றல் தோழியாம்
கன்னி ஊர்வலம் வருவாள்

அவள் உன்னைக்கண்டு உயிர் காதல் கொண்டு
தன் உள்ளம் தன்னையே தருவாள்
அவள் உன்னைக்கண்டு உயிர் காதல் கொண்டு
தன் உள்ளம் தன்னையே தருவாள்

நான் அள்ளிக்கொள்ள அவள் பள்ளிக்கொள்ள
சுகம் மெல்ல மெல்லவே புரியும்
நான் அள்ளிக்கொள்ள அவள் பள்ளிக்கொள்ள
சுகம் மெல்ல மெல்லவே புரியும்

கை தொடுவார் தொடாமல் தூக்கம் வருமோ
துணையை தேடி நீ வரலாம்
கை தொடுவார் தொடாமல் தூக்கம் வருமோ
துணையை தேடி நீ வரலாம்

குமரிப்பெண்ணின் உள்ளத்திலே குடியிருக்க நான்
வரவேண்டும்
குடியிருக்க நான் வருவதென்றால் வாடகை என்ன
தரவேண்டும்

பூவை என்பதோர் பூவை கண்டதும்
தேவை தேவை என்று வருவேன்

இடை மின்னல் கேட்க நடை அன்னம் கேட்க
அதை உன்னை கேட்டு நான் தருவேன்

கொடுத்தாலும் என்ன எடுத்தாலும் என்ன
ஒரு நாளும் அழகு குறையாது

அந்த அழகே வராமல் ஆசை வருமோ
அமுதும் தேனும் நீ பெரலாம்

குமரிப்பெண்ணின் உள்ளத்திலே குடியிருக்க நான் வரவேண்டும்
குடியிருக்க நான் வருவதென்றால் வாடகை என்ன தரவேண்டும்

குமரி பெண்ணின் கைகளிலே காதல் நெஞ்சை தரவேண்டும்
காதல் நெஞ்சை தந்து விட்டு குடியிருக்க நீ வரவேண்டும்

****

3.

எழுதியவர் : *வாலி,* ***இசை :*** *விஸ்வநாதன் ராமமூர்த்தி,*
பாடியவர் : *T.M. சௌந்தரராஜன்*

நான் ஆணையிட்டால் ...
அது நடந்து விட்டால் ...

நான் ஆணையிட்டால் அது நடந்து விட்டால்
இங்கு ஏழைகள் வேதனைப் பட மாட்டார்
உயிர் உள்ளவரை ஒரு துன்பமில்லை
அவர் கண்ணீர்க் கடலிலே விழமாட்டார்

நான் ஆணையிட்டால் அது நடந்து விட்டால்
இங்கு ஏழைகள் வேதனைப் பட மாட்டார்
உயிர் உள்ளவரை ஒரு துன்பமில்லை
அவர் கண்ணீர்க் கடலிலே விழமாட்டார்

ஒரு தவறு செய்தால் அதைத் தெரிந்து செய்தால்
அவன் தேவன் என்றாலும் விட மாட்டேன்
உடல் உழைக்கச் சொல்வேன் அதில் பிழைக்கச்
சொல்வேன்
அவர் உரிமைப் பொருள்களைத் தொட மாட்டேன்

நான் ஆணையிட்டால் அது நடந்து விட்டால்
இங்கு ஏழைகள் வேதனைப் பட மாட்டார்
உயிர் உள்ளவரை ஒரு துன்பமில்லை
அவர் கண்ணீர்க் கடலிலே விழமாட்டார்

சிலர் ஆசைக்கும் தேவைக்கும் வாழ்வுக்கும்
வசதிக்கும்
ஊரார் கால் பிடிப்பார்
ஒரு மானமில்லை அதில் ஈனமில்லை
அவர் எப்போதும் வால் பிடிப்பார்
எதிர் காலம் வரும் என் கடமை வரும்
இந்தக் கூட்டத்தின் ஆட்டத்தை ஒழிப்பேன்
பொது நீதியிலே புதுப் பாதையிலே
வரும் நல்லோர் முகத்திலே விழிப்பேன்
வரும் நல்லோர் முகத்திலே விழிப்பேன்

நான் ஆணையிட்டால் அது நடந்து விட்டால்
இங்கு ஏழைகள் வேதனைப் பட மாட்டார்
உயிர் உள்ளவரை ஒரு துன்பமில்லை
அவர் கண்ணீர்க் கடலிலே விழமாட்டார்

இங்கு ஊமைகள் ஏங்கவும் உண்மைகள் தூங்கவும்
நானா பார்த்திருப்பேன்
ஒரு கடவுள் உண்டு அவன் கொள்கை உண்டு
அதை எப்போதும் காத்திருப்பேன்
முன்பு ஏசு வந்தார் பின்பு காந்தி வந்தார்
இந்த மானிடர் திருந்திட பிறந்தார்
இவர் திருந்தவில்லை மனம் வருந்தவில்லை
அந்த மேலோர் சொன்னதை மறந்தார்
அந்த மேலோர் சொன்னதை மறந்தார்

நான் ஆணையிட்டால் அது நடந்து விட்டால்
இங்கு ஏழைகள் வேதனைப் பட மாட்டார்
உயிர் உள்ளவரை ஒரு துன்பமில்லை
அவர் கண்ணீர்க் கடலிலே விழமாட்டார்

ஆஹாஹா ஆஹாஹா ஆ...
ஆஹாஹா ஆஹாஹா ஆ...

****

4.

எழுதியவர் : *ஆலங்குடி சோமு,,* ***இசை :*** *விஸ்வநாதன் ராமமூர்த்தி,* ***பாடியவர் :*** *P. சுசிலா, T.M. சௌந்தரராஜன்*

பெண் போனால்... இந்த பெண் போனால்
இவள் பின்னாலே என் கண் போகும்
வந்தாயோ கூட வந்தாயோ
முன்பு இல்லாத சுகம் தந்தாயோ

பாதி நிலாவை விண்ணில் வைத்து
மீதி நிலாவை மண்ணில் வைத்து

மண்ணில் வைத்ததை மங்கை உனது
கண்ணில் வைத்தானோ... கண்ணில் வைத்தானோ

ஆயிரம் பூவை அள்ளி எடுத்து
அள்ளி எடுத்ததை கிள்ளி எடுத்து
கொஞ்சம் கொஞ்சமாய் தேனை எடுத்து
நெஞ்சில் வைத்தானோ ... நெஞ்சில் வைத்தானோ
(பெண் போனால்)

வானவில் பெண்ணாய் வந்ததென்று
வார்த்தையில் போதை தந்ததென்று
அன்னம் நடந்தாள் ஆடிக் கிடந்தாள்
இன்னும் சொல்லவோ... இன்னும் சொல்லவோ

காதலன் பேரை சொல்லிக்கொண்டு
காத்திருந்தாளாம் அல்லித்தண்டு
தென்றல் அடிக்க தாவி அணைக்க
என்ன சுகமோ... என்ன சுகமோ..
(பெண் போனால்)

****

5.

எழுதியவர் : *வாலி,* ***இசை :*** *விஸ்வநாதன் ராமமூர்த்தி,*
பாடியவர் : *L.R. ஈஸ்வரி, T.M. சௌந்தரராஜன்*

நான் மாந்தோப்பில் நின்றிருந்தேன்
அவன் மாம்பழம் வேண்டுமென்றான்
அதை கொடுத்தாலும் வாங்கவில்லை
இந்த கன்னம் வேண்டுமென்றான்

நான் தண்ணீர் பந்தலில் நின்றிருந்தேன்
அவள் தாகம் என்று சொன்னாள்

நான் தன்னந்தனியாய் நின்றிருந்தேன்
அவள் மோகம் என்று சொன்னாள்

ஒன்று கேட்டால் என்ன கொடுத்தால் என்ன
குறைஞ்சா போய் விடும் என்றான்
கொஞ்சம் பார்த்தால் என்ன பொறுத்தால் என்ன
மறந்தா போய்விடும் என்றாள்
(நான் மாந்தோப்பில்...)

அவன் தாலி காட்டும் முன்னாலே தொட்டாலே
போதும்
என்றே துடி துடிச்சான்
அவள் வேலிகட்டும் முன்னாலே வெள்ளாமை ஏது
என்றே கதை படிச்சா
அவன் காதலுக்கும் பின்னாலே கல்யாணம் வருமோ
என்றே கையடிச்சான்
அவள் ஆகட்டும் என்றே ஆசையில் நின்றே
அத்தானின் காதைக் கடிச்சா
(நான் மாந்தோப்பில்...)

அவன் பூவிருக்கும் தேனெடுக்க பின்னாலே வந்து
வண்டாய் சிறகடிச்சான்
அவள் தேனெடுக்க வட்டமிடும் மச்சானை பிடிக்க
கண்ணாலே வலை விரிச்சா
அவன் ஜோடிகுயில் பாடுவதை சொல்லாமல்
சொல்லி
மெதுவா அணைச்சுக்கிட்டான்
அவள் ஆடியிலே பெண்ணாகி அஞ்சாறு மாசத்துல
அழகாத் தெரிஞ்சுக்கிட்டா
(நான் மாந்தோப்பில்...)

****

6.

எழுதியவர் : *ஆலங்குடி சோமு,,* ***இசை :*** *விஸ்வநாதன் ராமமூர்த்தி,* ***பாடியவர் :*** *L.R. ஈஸ்வரி. P. சுசிலா,*

வானகமே வையகமே வளர்ந்து வரும் தாயினமே
ஆணுலக மேடையிலே ஆசை நடை போடாதே ..
ஆசை நடை போடாதே

மலருக்குத் தென்றல் பகையானால்
அது மலர்ந்திடக் கதிரவன் துணையுண்டு
மலருக்குத் தென்றல் பகையானால்
அது மலர்ந்திடக் கதிரவன் துணையுண்டு
நிலவுக்கு வானம் பகையானால்
அது நடந்திட வேறே வழி ஏது
மலருக்குத் தென்றல் பகையானால்
அது மலர்ந்திடக் கதிரவன் துணையுண்டு

பறவைக்குச் சிறகு பகையானால்
அது பதுங்கி வாழ்ந்திடக் கால்களுண்டு
பறவைக்குச் சிறகு பகையானால்
அது பதுங்கி வாழ்ந்திடக் கால்களுண்டு
உறவுக்கு நெஞ்சே பகையானால் - மண்ணில்
உயிரினம் பெருகிட வகை ஏது
நிலவுக்கு வானம் பகையானால்
அது நடந்திட வேறே வழி ஏது
மலருக்குத் தென்றல் பகையானால்
அது மலர்ந்திடக் கதிரவன் துணையுண்டு

படகுக்குத் துடிப்பு பகையானால்
அங்கு பாய்மரத்தாலே உதவியுண்டு
படகுக்குத் துடிப்பு பகையானால்

அங்கு பாய்மரத்தாலே உதவியுண்டு
கடலுக்கு நீரே பகையானால் - அங்கு
கதை சொல்லும் அலைகளுக்கிடமேது
மலருக்குத் தென்றல் பகையானால்
அது மலர்ந்திடக் கதிரவன் துணையுண்டு

கண்ணுக்குப் பார்வை பகையானால்
அது கருத்தால் உணர்ந்திட வழியுண்டு
பெண்ணுக்குத் துணைவன் பகையானால் - அந்தப்
பேதையின் வாழ்வில் ஒளி ஏது
மலருக்குத் தென்றல் பகையானால்
அது மலர்ந்திடக் கதிரவன் துணையுண்டு
நிலவுக்கு வானம் பகையானால்
அது நடந்திட வேறே வழி ஏது
மலருக்குத் தென்றல் பகையானால்
அது மலர்ந்திடக் கதிரவன் துணையுண்டு.

****

முனைவர் செ.இராஜேஸ்வரி அவர்களின் நூல்கள்



₹ 200/-